ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

APRIL—1955

PUBLIC LIBRARY
AUG 1956
MADRAS

எய்டெட் பள்ளி மானேஜர்கள்
மாநாட்டுத் தலைவர்

டாக்டர் P. வரதராசலு நாயுடு, M.L.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady, P. O. Madras-1.

POST BOX NO. 1818

"ஆரம்பக்கல்வி" இனம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புதுமுறை **சங்க வாசகங்களை**" அல்லது **"வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை"** பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, **"ஆரம்பக்கல்வி"** மாதப் பத்திரிகையை இனமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்கு தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M. O. மூலம் அனுப்பவும்.

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	19	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	22	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0	7	0	23	19-5-'54
நான்காம் வகுப்பு	0	8	0	23	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	23	19-5-'54

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 1-0-0 அனுப்பவும்.

சென்னை மாநில ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் மாநாட்டில்
கலந்து கொண்ட பிரதிநிதிகள், பிரமுகர்களின் படம். (27–3–55)

By Courtesy: All India Press, Photo Agency, Mount Road, Madras—2.

CONNEMARA PUBLIC LIBRARY

மாநாட்டில் முதல் அமைச்சர்
திரு. K. காமராஜ நாடார் பேசுகிருர்.



மாநாட்டின் தலைவர் டாக்டர் P. வரதராசலு நாயுடு
தலைமையுரை ஆற்றுகிருர்.



MADRAS

ஆசிரியர் : பி. வீரராகவன்

மாநாட்டு மலர்

மலர் 16 | ஏப்ரல் 1955 | இதழ் 4

மாநில மாநாடு—மகத்தான வெற்றி!

"பிள்ளைகளுக்குத் தரப்படும் கல்வி எத்தகையதாய் இருக்க வேண்டும் என்பது, வேறு யாரைக் காட்டிலும், ஆசிரியர்களாகிய உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். இதைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த அளவு, பிள்ளைகளின் பெற்றோர்களுக்குக்கூடத் தெரிய வழியில்லை. ஏனெனில் மாலையாகிவிட்டால் குழந்தைகள் தூங்கிவிடுகின்றன. காலையில் எழுந்ததுமோ பள்ளிக்கூடத்திற்கு வந்து விடுகின்றன. இவ்விதமாகக் காலை முதல்மாலை வரை ஆசிரியர்களாகிய உங்களிடம்தான் குழந்தைகள் வளர்கின்றன. ஆகவேதான் கூறுகிறேன்—குழந்தைகளின் மனப்போக்கு உங்களுக்குத்தான் மிக நன்றாகத் தெரியமுடியும். இப்படிப்பட்ட உங்களைக் கலந்து ஆலோசிக்காமல், கல்விப் பிரச்சினையில் அரசாங்கத்தார், அவசரப்பட்டு எந்த ஒருமாற்றத்தையும் கொண்டுவரமாட்டார்கள் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். எங்கிருந்து கொண்டோ, யார் யாரோ, கல்விப்

பிரச்சினையைப்பற்றி முடிவு செய்கிறார்களே என்று எண்ண வேண்டாம். உங்களுடைய யோசனைகளை அரசாங்கம் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும்."

இவ்விதம் முழக்கமிட்டிருக்கிறார் முதலமைச்சர் காமராஜர்.

சென்னை மெமோரியல் மண்டபத்தில், 27—3—55 அன்று, சென்னை மாநில சர்க்கார் உதவிபெறும் மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றதல்லவா, அந்த மாநாட்டினைத் திறந்துவைத்தார் முதலமைச்சர். அந்த அரிய நேரத்தில்தான் இந்த உயரிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

நம்முடைய மாநில மாநாடு, மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது என்பதை விளக்க இதைவிடச் சான்று வேறென்ன தேவை?

சென்ற பல ஆண்டுகளாகவே நாம் பார்த்து வருகிறோம்—கல்வித்துறையில் ஆசிரியர்கள் அலட்சியப்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள்.

ஆரம்ப ஆசிரியர்கள்தானே—ஆசிரிய மானேஜர்கள்தானே—போதுமான செல்வாக்கும் ஏராளமான பணமும் வாய்க்கப்பெறாத பரம ஏழைகள்தானே—போராட்டப் பாதையில் புகுந்திடத் தெரியாத கண்ணியம்மிக்க கனவான்கள்தானே—இவர்களைக் கேட்டாலென்ன கேட்காவிட்டால்தானென்ன? என்கிற அசட்டு உணர்ச்சி இதுவரை அரசாங்கத்தை ஆட்டிப் படைத்திருக்கிறது.

பாட திட்டத்தை மாற்றி அமைப்பதற்கான உத்தரவா—அது பற்றி ஆசிரியர்களை விசாரிப்பது கிடையாது.

கல்வித் திட்டத்தின் நோக்கத்திலேயே ஒரு புது மாறுதலா—மானேஜர்கள் என்ன சொல்கிறார்கள்—கேட்பது கிடையாது.

அவசர அவசரமாக ஆதாரக் கல்வியை அர்த்தமற்ற முறையில் பள்ளிகளில் திணிப்பதா—ஆசிரியர்களின் கருத்தென்ன—அறிய முயல்வதில்லை.

ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவைப்பற்றிய உத்தரவா—இரு சாராரின் கருத்தையும் அறிந்த பிறகே அது புறப்படவேண்டும். ஆனால் அப்படி நடப்பதில்லை.

கல்வியின் நோக்கத்தைப் பற்றியும், அந்த நோக்கத்தைச் செயலாற்றும் நடைமுறையைப் பற்றியும், பாட திட்டத்தைப் பற்றியும், அந்தத் திட்டத்தில் செய்யவேண்டிய மாறுதல்களைப் பற்றியும், பள்ளிக்கூட நிர்வாகத்தைப்பற்றியும், அந்த நிர்வாகத்திற்கு இருந்து

வருகிற அதிகாரத்தைப் பற்றியும் சென்ற சில ஆண்டுகளில் எத்தனையோ மாறுதல்களைச் செய்திருக்கிறது அரசாங்கம்.

ஆனால் அந்தப் பிரச்சினைகளிலே, பெரும்பாலும், ஆசிரியர்களை அழைத்து அவர்களுடைய கருத்தை அறியவேண்டுமே என்கிற எண்ணத்தைக் கொள்ளவில்லை அரசாங்கம்.

அன்பர் ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தநேரத்தில் ஒரே வேளைக் கல்வி என்கிற திட்டத்தைக் கொண்டு வந்தாரே அதனை ஆசிரியர்களையும் மானேஜர்களையும் கேட்டுக்கொண்டா எடுத்து வந்தார்?

கேட்டிருந்தால் ஆசிரியர்கள் அதனை முதலிலேயே வேண்டாம் என்று கூறியிருப்பார்கள்.

இந்த நாட்டின் எதிர்காலத்தையே இருண்டு போகச் செய்யும் திட்டமது என்பதை எடுத்துக் காட்டியிருப்பார்கள்.

சவக்குழி நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஜாதிச் சனியனை மீண்டும் அழைத்துவந்து அரியணையில் அமரவைக்கும் அவசியமற்ற ஏற்பாடு அது என்பதை விளக்கிக் காட்டியிருப்பார்கள்.

கல்வியின் வளர்ச்சிக்குக் கடுகளவும் பயன்படாத திட்டம் என்பதை ஆதாரபூர்வமாக அலசிக் காட்டியிருப்பார்கள்.

ஆனால் அந்த ஜனநாயகப் பாதை வழி செல்லவில்லை முன்னாள் 'தனம்' ஆச்சாரியார். எனவேதான் எதிர்ப்பும் கண்டனமும் அலை அலையாக எழுந்தன நாட்டிலே. திட்டமும் தவிடுபொடியாயிற்று.

அண்மையில் ஆரம்பக்கல்வியின் சீரமைப்பைப்பற்றி ஆராய்வதற்காக நிபுணர்குழு ஒன்றை அமைத்திருக்கிறார்களே ஆட்சியாளர்கள், அதிலேயும் இப்படித்தான் ஆரம்ப ஆசிரியரோ அல்லது ஆரம்பப் பள்ளி மானேஜரோ, ஒருவர்கூட இல்லை.

கமிட்டி அமைந்திருப்பதோ ஆரம்பக் கல்வியைத் திருத்தி அமைக்க!

ஆனால் அதில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களோ ஆரம்பக் கல்வியோடு நேரடித் தொடர்புகொண்ட ஆசிரியர்களையும் மானேஜர்களையும் தவிர மற்ற அத்தனைப் பேரும்!

திருமணம் நடக்கிறது—அதிலே மணமகன் இல்லை!

அழகான சிலைதான்—அதற்குத் தலைதான் இல்லை!

வேக வேகமாக வைத்தியம் நடக்கிறது—ஆனல் டாக்டர் இல்லை !

இப்படிபபட்ட ஓர் விசித்திரம்தான்—ஆரம்ப ஆசிரியர்களே இல்லாமல் ஆரம்பக் கல்விச் சீரமைப்புக் குழு அமைவது !

ஆனல் அமைந்தது இந்த நாட்டிலே ! பார்த்தோம் நாம் !!

முறையல்ல—நீதி ஆகாது—நேர்மையான பாதை இது அல்ல. என்றாலும் இந்த வழியிலேதான் சென்றது சென்னை அரசாங்கம் ! கண்டோம் நாம் !!

எந்தத் துறையிலே யார் திறமை பெற்றவர்களோ அந்தத் துறைபற்றிய ஆலோசனைகளை அவர்களை வைத்துக்கொண்டுதான் செய்யவேண்டும்.—இது உலகம் ஒப்புக்கொண்ட பொதுவிதி.

ஆனல் இந்த அனுபவ உண்மையை சென்னை ஆட்சிப் பீடம் இதுவரை ஒப்புக்கொள்ள மறுத்து வந்தது.

இப்போதோ நிலைமை மாறிவிட்டது. புதிய முதலமைச்சர் காமராஜர் தெளிவாகவே கூறுகிறார். ஆசிரியர்களின் கருத்தை அறியாமல் கல்வித்துறையில் அரசாங்கத்தார் தலையிடவேமாட்டார் கள் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். பிள்ளைகளைப் பற்றிய பிரச்சினையில் அவர்களல்லவா நிபுணர்கள் என்று இனிமையும் சுவை யும் ததும்பும்வகையில் இயம்புகிறார். “அவர்களைப்பற்றிப் பெற்றோர் களுக்குக்கூட இந்த அளவு தெரியாதே—காலை முதல் மாலைவரை உங்களிடம்தானே பிள்ளைகள் பழகுகின்றன—இந்த நிலையில் உங்க ளைத்தவிர வேறு யார் அவர்களைப்பற்றி அளந்துரைக்க வல்லவர்கள்” என்று நம்மையே கேட்கிறார், நல்லுரை பகர்கிறார்.

ஆமாம் நண்பர்களே ஆமாம். கல்விப் பிரச்சினைகளில் ஆசிரியர் களின் கருத்தை அறியாமல் அரசாங்கம் இனி எத்தகைய முடிவுக் கும் வராது என்கிற முக்கியமான உறுதி மொழியை ஒரு முதல் அமைச்சர் இத்தனைத் தெளிவாகக் கூறியது இதுதான் முதல் முறை.

நம்முடைய மாநாடு பெற்ற மாபெரும் வெற்றி இது என்றால், எவர் மறுக்க இயலும் ?

முதல் தரமான இந்த வெற்றியைப் பெற்றுத் தந்ததோடு நிற்க வில்லை நம் மாநில மாநாடு. மேலும் பல வெற்றிகளை, பலப்பல வெற்றிகளை, அள்ளி யெடுத்து அன்புடன் அளித்திருக்கிறது.

“குழந்தைகளுக்குத் தொழிற் கல்வி வேண்டும்—இப்போ துள்ள கல்வி முறையில் மாற்றம் வேண்டும் என்று நிரம்பப்

படித்தவர்கள்கூடச் சொல்லுகிறார்கள். உண்மைதான். இனி உழைப்புக்குத்தான் மதிப்புண்டு. ஆனால் 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, அந்த 'உழைப்புடன் கூடிய கல்வி' தேவையில்லை. 5 வயதுக் குழந்தைகளால் உழைக்க முடியாது. உழைப்பைப் பற்றி, உழைப்பின் மேன்மையைப் பற்றி, அவர்களால் ஏதும் அறிந்து கொள்வதும் இயலாது. தொழிற் கல்வி தேவைதான். ஆனால் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அது தேவை யில்லை. சின்னஞ் சிறு வயதிலேயே தொழிற் கல்வி தர நினைப்பது, குழந்தைகளைப் பிஞ்சிலேயே பழுக்கவைக்க முயல்வதற்கு ஒப்பாகும். அது முற்றிலும் தீங்கானது."

எழில் தவழும் இச் சொற்களை நம் அனைவரின் உளம் மகிழும் வகையில் தந்திருப்பவரும் காமராஜர்தான்.

தந்த இடமும் நம் மாநில மாநாடுதான்.

சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தொழிற் கல்வியைத் தர முயல்வது வீண் வீண் என்பதை நாம் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

அனறலர்ந்த செந்தாமரைகள் போன்ற சிறுவர்கள்மீது தொழிற் கல்வியைத் திணிப்பதால், தொழிற் கல்விமீது பாசமல்ல—பகைதான் ஏற்படும்; நேசமல்ல—வெறுப்புதான் உண்டாகும் என்பதை எத்தனையோ முறை விளக்கியிருக்கிறோம்.

14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது—மீறி வைத்துக் கொண்டால், வைத்துக் கொள்பவர்கட்குத் தண்டனை என்று தொழிற்சாலைச் சட்டம் தெரிவிக்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல, முற்போக்கு உணர்ச்சி படைத்த எல்லா நாடுகளிலேயும் இப்படிப்பட்ட ஒரு தடை பற்பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. 14 வயதுக்கு உட்பட்டவர்களிடமிருந்து வேலை வாங்குவது, அவர்களைத் தொழில் புரியும்படி கட்டாயப் படுத்துவது, ஜீவகாருண்யமல்ல என்கிற காரணத்தை முன்வைத்துத்தானே இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது? இந்த நிலையில் பள்ளிக்கூடங்களில் தொழிற் கல்வி என்கிற பெயரால் அதே வயதுச் சிறுவர்களிடமிருந்து கடுந்தொழிலைப் பெறுவது மட்டும் எப்படி நியாயமாகிவிட முடியும்?

இந்த முக்கியமான காரணத்தை முன்னிட்டுத்தான் ஆதாரக் கல்வித் திட்டத்தை நாம் முழு மூச்சுடன் எதிர்த்து வருகிறோம்.

இதே காரணத்துக்காகத்தான் ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை நாம் கவைக் குதவாதது என்று கண்டித்து ஒதுக்கினோம்.

இப்போது இந்தக் காரணத்தை முதலமைச்சர் காமராஜர் அவர்களும் ஒப்புக்கொள்கிறார் என்பதை அறிகிறோம்—மிக மிக மகிழ்கிறோம்.

"இளங் குழந்தைகளுக்குத் தொழிற் கல்வி தேவையில்லை. தேவையில்லாதது மட்டுமல்ல தீமை பயப்பதுமாகும்" என்பது ஒரு முக்கியமான முடிவு.

இந்த முடிவுக்கு ஆசிரியர்கள் வந்து நீண்ட காலமாகிவிட்டது. ஆனால் சென்னை அரசாங்கமும் இதே முடிவைத்தான் கொண்டிருக்கிறது என்கிற உண்மையை, முதலமைச்சர், தெள்ளத் தெளிவாகவும் அழுத்தந் திருத்தமாகவும் தெரிவித்திருக்கிற முதல் இடம், முதல் நேரம், முதல் சமயம், நம்முடைய மாநில மாநாடுதான்.

மாநில மாநாட்டினால் நாம் பெற்றிருக்கிற மற்றோர் மகத்தான வெற்றி இது.

ஆரம்பப் பள்ளிகளில் படிக்க வேண்டிய வயதுடைய பிள்ளைகள் அத்தனைப் பேரும் இப்போது பள்ளிகளில் இல்லை.

அவர்களில், நூற்றுக்கு நாற்பது பேர், பள்ளிக்கூடங்களில் சேரவே இல்லை.

இப்படிச் சேராததற்குக் காரணம், சில வட்டாரங்களில், ஆரம்பப் பள்ளிக்கூடங்களே இல்லை என்பதாகும்.

இருக்கும் பள்ளிகள், பிள்ளைகள் செல்ல முடியாத அளவு நீண்ட தொலைவில் இருக்கின்றன என்பது மற்றுமோர்காரணமாகும்.

ஆனால் மிக முக்கியமான காரணம், பெற்றோர்களின் வறுமையே.

ஏழைப் பிள்ளைகள் எல்லோருக்கும், பள்ளிக்கூடத்தில் பகல் உணவு இலவசமாக அளிக்கப்படும் என்கிற நிலை இருந்தால், இப்போது பள்ளிக்கூடம் சேராமல் இருக்கிற பிள்ளைகளில் மிகப் பலர் சேர்ந்துவிடுவர்.

இது நிச்சயம்.

இதனை, பிள்ளைகளோடும் அவர்களின் பெற்றோர்களோடும் பழகியவர்கள் என்கிற முறையிலே மிக நன்றாக அறிவோம் நாம்.

அறிந்ததால்தான், அடிக்கடி, இதனை "ஆரம்பக் கல்வி இதழ் மூலம் வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறோம்.

நம் மாநில மாநாட்டிலேயும், இலவசப் பகல் உணவின் இன்றி யமையாமையை வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக் கிறது.

மாநாட்டு வரவேற்புத் தலைவர் திருவாளர் சேஷாசலம் அவர் களும் இந்தக் கோரிக்கையைத் தெளிவாக இயம்பியிருக்கிறார்.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்றிருக்கிற ஆசிரி யர்களின் மாநாடுகளிலேயும் இதுபற்றிய தீர்மானம் நிறை வேற்றப் பட்டிருக்கிறது.

இங்ஙனம் நம் அனைவராலும் ஒரு மனதாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிற பகல் உணவைப்பற்றி, நம் மாநாட்டில் காமராசர் அவர் களும் தெளிவுரை வழங்கியிருக்கிறார்.

"எட்டாம் வகுப்புவரை கல்வி பயிலும் ஏழை மாணவர் எல்லோருக்கும் பகல் உணவு இலவசமாகத் தரவேண்டும் என் பதே எனது ஆசை.

கிராம மக்கள், தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பாதிருப்பதற்கு வறுமைதான் முக்கிய காரணமாகும்.

குழந்தைகளுக்கு இலவசமாகப் பகல் உணவு தந்தால் அநேகமாக எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடம் வருவார்கள்.

ஆனால் அதனை எப்படிச் செய்வது—அது பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எப்படியேனும் அதற் கான பணத்திற்கு வழி வகை செய்ய வேண்டும். புது வரிகள் போட்டாவது—யார் கோபித்துக் கொண்டாலும் சரி. புது வரி கள் போட்டால், யாராவது சிலருக்குக் கோபம் வரத்தான் செய் யும்–புது வரிகள் போட்டாவது பணம் திரட்டி ஏழை மாணவர் களுக்குப் பகல் உணவு தரவேண்டும் என்பதே என் விருப்பம்."

காமராசரின் கருத்துரை இது. வெறும் கருத்துரை மட்டுமல்ல. விரைவிலேயே இந்த உரை செயல்வடிவம் பெறக்கூடும் என்று, அர சாங்கத்தின் கருத்தை அறிந்தவர்கள் நமக்குத் தெரிவிக்கிறார்கள்.

மாநில மாநாட்டால் ஏற்பட்ட மற்றோர் நல்விளைவு இது என் றால் அதிலென்ன தவறு?

ஆதாரக் கல்வி ஆதாரக் கல்வி என்று அடிக்கடி பேசுகிறார்களே சிலர் அர்த்தமில்லாமல், அதையும் விட்டுவைக்கவில்லை. கனம் காமராசர்.

"ஆதாரக் கல்வி நல்லமுறைதான். உயர்ந்த லட்சியம் கொண்டதுதான். ஆனால் அதுவும் 10 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்குத் தேவையில்லை. ஒரு வேளை அல்லது குறிப்பிட்ட நேரம் படிப்புப் போதுமென்றால், மிச்சமிருக்கிற நேரத்தில் அந்தச் சின்னஞ் சிறார்கள் ஆடி ஓடி விளையாடி மகிழட்டும். அதை விடுத்து அரை வேளை பள்ளிக்கூடத்திலும் அரை வேளை கொல்லன் பட்டறையிலும் சிறு குழந்தைகளை இருக்க விடுவது என்றால் நடக்கிற செயலா இது? தச்சனோ கொல்லனோ, விவசாயியோ, வேறு தொழில் புரிபவனோ, எவனாயினும் அவனவனுக்குத் தன்தன் தொழிலைக் கவனிக்கத்தான் நேரம் இருக்குமே தவிர, பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு அவனுக்கு ஏது நேரம்?"

இப்படிப் பேசியிருக்கிறார் காமராசர்!

எப்படிப்பட்ட இனிய உரை!

இதே வார்த்தைகள் அல்ல—ஆனால் ஏறத்தாழ இதே வார்த்தைகளை எத்தனைமுறை எழுதியிருக்கிறது "ஆரம்பக்கல்வி"!

இப்படியெல்லாம் எழுதலாமா ஆதாரக் கல்வியைத் தாக்கி? என்று ஒரு சிலர் கோபம்கூட கொண்டனர் நம்மீது. தூற்றல் அந்தாதியை நம்மீது வீசியவர்களும் உண்டு. ஆனால் இதோ கனம் காமராசர் நம்முடைய கருத்தே நேர்மையான கருத்து என்பதைத் திட்டவட்டமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். மகிழ்ச்சி, நம் உள்ளத்தை முற்றுகையிடாமலா இருக்கும்?

இப்படியெல்லாம் நம் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த பற்பல பிரச்சினைகளை, மாநாடு, அரசாங்கத்தின்முன் வெற்றிகரமாக வைத்திருக்கிறது.

பல பிரச்சினைகளில் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தது மட்டுமல்ல, பொதுமக்களின் கவனத்தையும் மிகப் பெரிய அளவுக்குத் தன்பால் ஈர்த்திருக்கிறது நம் மாநாடு

நம் நாடு, விடுதலை, தினமணி, சுதேசமித்திரன், இந்தியன் எக்ஸ்பிரஸ், தினத்தந்தி, மெயில், ஹிந்து ஆகிய எல்லா தினசரிகளிலேயும், நம் மாநாட்டின் நிகழ்ச்சிகள், மக்கள்தம் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையிலே வெளியாகியிருக்கின்றன.

மாநாட்டுத் திறப்பாளர் திருவாளர் காமராசர், மாநாட்டு வரவேற்புத் தலைவர் திருவாளர் சேஷாசலம், மாநாட்டுத் தலைவர் டாக்டர் வரதராசலு நாயுடு ஆகிய மூவர்தம் சொற்பொழிவுகள் மட்டு

யிலை, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் தெளிவான முறையில் வெளியாகியிருக்கின்றன இந்த ஏடுகளில்.

நம் நாடு, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஏடுகளில் மாநாட்டில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளைப்பற்றி தலையங்கங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன.

ஈ. எஸ். எல். சி பரீட்சை ஒழிய வேண்டும் என்றும், ஆசிரியர்களின் ஊதியம் உயரவேண்டும் என்றும், பிள்ளைகளுக்குப் பகல் உணவு தரப்படவேண்டும் என்றும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை முழு மனதுடன் ஆதரித்து அருமையான விளக்கமும் தந்திருக்கிறது "நம் நாடு", தன்னுடைய தலையங்கத்தில்.

அரியதோர் தலையங்கம் தீட்டி நம் உரிமை முழக்கங்கட்குத் தன் அன்பான ஆதரவைத் தந்ததோடு நில்லாமல், "நம் நாடு," நான்கைந்து நாட்கள், தொடர்ச்சியாகவும், விரிவாகவும், நம் மாநாட்டுச் சொற்பொழிவுகளை வெளியிட்டு, அப்படி வெளியிட்டதன் வாயிலாக மக்களின் உள்ளத்தை நம் பிரச்சினைகளின் பக்கம் திருப்பியிருக்கிறது.

உதவிபெறும் பள்ளிகளின் தனிச் சிறப்பு யாது? ஈ. எஸ். எல். சி. பரீட்சை ஏன் ஒழிந்தாகவேண்டும்? ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியம் எந்த அளவில் இருக்கிறது? கல்வியின் திட்டங்களை ஏன் அரசாங்கமே வகுத்தல் கூடாது? கல்விச் சபைகள் எதற்காக ஏற்படவேண்டும்? உதவிபெறும் நிர்வாகங்களின் தொல்லைகள் யாவை? தொழிற் கல்வியை எந்த வயதுப் பிள்ளைகளுக்குப் புகட்டினால் தீமை விளையாமல் இருக்கும்?

இவற்றையும் இவைபோன்ற வேறு பல பிரச்சினைகளையும், மக்கள் மன்றம் இதுபோது கூர்ந்து கவனிக்கிறது. கவனித்து ஆராய்கிறது. ஆராய்ந்து, ஒருவருக்கொருவர், அளவளாவுகிறது.

இத்தகையதோர் இனிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது நம் மாநில மாநாடு.

இதுவரை நம்முடைய பிரச்சினைகள் அவ்வளவாக வெளியே தெரியாமலிருந்தன.

இப்போதோ, அவை, எங்கும் நிறைநாதங்களாக மாறிவிட்டன

இருளைக் கிழித்துக்கொண்டு ஒளி மின்னத்தொடங்கிவிட்டது.

மேகங்களை அப்பால் தள்ளிவிட்டு நிலா தன் புன்னகையை வீச ஆரம்பித்து விட்டது.

பேசாதோர் எல்லாம் பேசத் தொடங்கிவிட்டனர்.

கவனிக்காதவர்களெல்லாம்கூட கவனிக்கத் தொடங்கிவிட்டனர்.

பல பிரச்சினைகளிலே முழு வெற்றி—வேறு பலவற்றிலே பாதி யளவு இன்பம்—மற்ற பல பிரச்சினைகளிலோ அனைவருடைய கவனத்தையும் நாம் கவர்ந்திருக்கிறோம்.

ஆமாம் தோழர்களே, அன்புள்ள மானேஜர்களே, ஆசிரிய நண்பர்களே, நாம் பெரியதோர் வெற்றியைப் பெற்றிருக்கிறோம் இந்த மாநாட்டின்மூலம்.

இத்தகைய மாநாட்டை இத்துணைச் சிறப்பாக நடைபெறும்படி உதவி புரிந்த

முதலமைச்சர் கனம் காமராஜர்,

முதுபெருந் தலைவர் டாக்டர் வரதராசலு நாயுடு,

கல்வித் துறைத் தலைவர் திரு. சுந்தரவடிவேலு,

பாரிஸ்டர் ரங்கராமாநுசம்,

முன்னாள் மேயர் திரு. இராமசாமி நாயுடு,

அன்புள்ள மானேஜர்கள்,

ஆர்வமிக்க ஆசிரிய மானேஜர்கள்,

ஆற்றல் நிரம்பிய ஆரம்ப ஆசிரியர்கள்,

செய்திகளை வெளியிட்டுதவிய பத்திரிகாசிரியர்கள்.

ஆகிய அனைவருக்கும் நம் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு" என்கிற மூதுரை எத்துணைச் சீரியது என்பதைத்தான் இந்த மாநாடு எழில்பட விளக்கியிருக்கிறது.

ஒன்றுபட்டு நின்றால்—நின்று நம் குரலை எழுப்பினால்—எழுப்பும் குரலிலே போதுமான வன்மை இருந்தால், வெற்றி, விரைந்தோடி வந்து நம் காலடியில் தஞ்சம் புகுவது உறுதி உறுதி.

ஆம். அப்படித்தான் சொல்கின்றன 27–3–55ல் நடைபெற்ற மாநில மாநாட்டால் நாம் பெற்ற வெற்றிகள்.

சென்னையில் மாநாடு—சீர்மிகு காட்சி

டாக்டர் நாயுடுவின் வீரமுழக்கம்

பேரறிஞர் நமசிவாயரின் படத் திறப்பு

27–3–55—ஆம்—அன்றுதான் சென்னை மெமோரியல் மண்டபம் கல்வி மாளிகையாகக் காட்சி யளித்தது. அன்பும் ஆர்வமும் ததும்பும் மானேஜர்கள் ஓர் பால். எழுத்தறிவிக்கும் பணியே இன்பம் நிறைந்த பணி என முழங்கும் ஆசிரியத் தோழர்கள் மற்ருேர் பால். பழுத்த அநுபவமும் நிறைந்த வயதும் படைத்த கல்வித் துறை வல்லுநர்கள் ஓர் பால். அரும்பு மீசையும் திரண்ட தோளும் படைத்த இளைய உள்ளங்கள் மற்ருேர் பால். மகிழ்ச்சி ததும்பும் முகத்தோடும் அறிவு ததும்பும் மனத்தோடும் ஓடோடி வந்திருந்த பெண் ஆசிரியர்கள் ஓர் பால். கல்வித் துறையின் வளர்ச்சியிலே உங்களுக்கு மட்டுந்தாளு, எங்களுக்கும் அக்கறை உண்டு என்று கூறுவதுபோல புன்முறுவல் பூத்த முகத்துடனே அன்புடன் அமர்ந்திருந்த பொதுமக்கள் மற்ருேர் பால். இங்ஙனம் மண்டபம் முழுவதும் கல்வியின் வளர்ச்சிமீது கருத்துமிகக் கொண்ட கண்ணியர்கள் நிரம்பியிருந்தனர்.

சென்னை மாநில உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்களின் மாநாடுதான் அது. என்ருலும் ஆசிரியத் தோழர்களும் ஏராளமாக மாநாட்டில் குழுமியிருந்தனர். இந்தக் காட்சி, ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்குமிடையே நிலவும் ஒற்றுமையை, அன்பை, மாசற்ற பிணைப்பை, நல்லுறவை நன்கினிது விளக்குவதாக இருந்தது.

காலை 10–மணி அளவில் மாநாடு தொடங்கப்பட்டது. முதற்கண் **“ஆரம்பக் கல்வி” ஆசிரியர் திரு. பி. வீரராகவன்** அவர்கள் வந்திருந்த அனைவரையும் வரவேற்று, முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களை மாநாட்டைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சர் காமராசர் அவர்கள் கல்வித் துறை பற்றிய பல்வேறு பிரச்சினைகளையும் தெளிவாக விளக்கி அரைமணி நேரத்துக்குமேல் விரிவுரை ஆற்றினர். ஆசிரியர்களின் மனக் கருத்தை முன்னதாக அறியாமல், அவர்களுடைய அன்பான ஒப்புதலைப் பெருமல், அரசாங்கம், கல்வித் துறையில் எத்தகைய மாறுதலையும் செய்யாது என்று அவர் உறுதி யுரை பகர்ந்தபோது, கடலோசையெனக் கையோசை எழுந்தது. சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத்

தொழிற் கல்வி தர முயல்வது வீண் முயற்சியே யாகும் என்பதையும் அவர் அழகுபட விளக்கினர். எப்போதும் சில பல நிமிஷங்களிலேயே தன் உரையை முடித்துவிடும் இயல்புடைய அவர், அன்றைய தினம் அரைமணி நேரத்திற்கும் மேலாக, ஆர்வத்தோடும் நகைச்சுவையோடும் சொற்பொழிவாற்றியது அனைவர் உள்ளத்திலும் இன்பத்தை விளைப்பதாக அமைந்தது.

அடுத்து, மாநாட்டு வரவேற்புத் தலைவர் **திரு. ஏ. ஆர். சேஷாசலம் அவர்கள்**, தன்னுடைய இனிய அரிய வரவேற்புரையைத் தெளிவும் திறமும் மிகுந்த முறையில் நிகழ்த்தலானர். அவருடைய பேருரை, ஆரம்பக் கல்வி உலகத்தைப் பற்றிய முக்கிய பிரச்சினைகள் ஒவ்வொன்றையையும் அலசி அலசி ஆராய்வதாக அமைந்திருந்தது. இன்றைய தமிழ் நாட்டு ஆசிரியர் உலகத்தின் காலக் கண்ணடி எனலாம் அவருடைய சொற்பொழிவை.

அதன்பின், வரவேற்புத் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழகத்தின் பழம் பெருந் தலைவர் **டாக்டர் பி. வரதராசலு நாயுடு எம். எல். ஏ. அவர்கள்** மாநாட்டுத் தலைமையேற்று வீரவுரை நிகழ்த்தினர். அன்னர்தம் வயதிலே முதுமையின் சோர்வு காணப்பட்டாலும் அவர்தம் சொற்பொழிவிலே இளமையின் வீரம் துள்ளி விளையாடிற்று. அந்த மூதறிஞர் பேசிக்கொண்டிருக்கும்போது, கருத்துக்கள், அடுக்கடுக்காக ஆனல் அழகழகாக வந்து குவிந்தபடி இருந்தன. ஆசிரியர்களின் ஊதியத்தைக் கணிசமான அளவு உயர்த்தினலொழிய கல்வியின் தரம் உயராது என்பதை அவர் வற்புறுத்தியபோதும் சரி, பள்ளிக்கூடங்களில் மதக் கல்வியை நுழைத்தால் பூசலும் பகையும்தான் விளையுமே தவிர நேசமும் பாசமும் தவழ மாட்டாது என்பதை அவர் தெள்ளிதின் விளக்கிய நேரத்திலும் சரி, ஆரம்பப் பள்ளிகளிகள் தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில்தான் தொடர்ந்து இருக்கவேண்டும்—அரசாங்கத்தின் நேரடி ஆதிக்கத்தில் போகக்கூடாது என்பதை அவர் அழுத்தந்திருத்தமாக இயம்பிய போதும் சரி, மாநாட்டில் குழுமி இருந்த அத்தனைப் பேரும் அந்த வீரத் தலைவரின் பேச்சுத் திறமையை வியவாமல் இல்லை.

தலைவரின் பேருரை முடிந்ததும், முன்னள் மேயர் **திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள்**, காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் நமசிவாய முதலியார் அவர்கள் உருவப் படத்தையும் **பாரிஸ்டர் ரங்கராமானுசம் அவர்கள்,** மாநில மானேஜர்கள் சங்கத்தின் முன்னள் செயலாளரும் உதவிபெறும் பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரும்பணி புரிந்தவருமாகிய திருவாளர் கே. இராமாநுஜம் பிள்ளை அவர்களின் உருவப் படத்தையும் திறந்துவைத்து, படத்தின் தலைவர்களைப் பற்றி விரிவுரை யாற்றினர்.

இந்த அளவில் மாநாட்டின் முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது.

இடைவேளையின்போது, மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் அனைவருக்கும், வரவேற்புக் குழுவினரால், சிறந்த முறையில் விருந்தளிக்கப்பட்டது.

பிற்பகல் நிகழ்ச்சி சுமார் நான்கு மணிக்குத் தொடங்கியது அவ்வமயம், கல்வியின் வளர்ச்சி, ஆசிரியர்களின் நிலையில் உயர்வு, நிர்வாகிகளின் சங்கடங்கள் ஆகிய பல பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானங்கள் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் பற்றிய விவாதத்தில் திருவாளர்கள் "ஆரம்பக் கல்வி" ஆசிரியர் பி. வீரராகவன், ஆதாரக்கல்வி ஆசிரியர் ஏ. கே. எஸ். சர்மா, மதுரை ஆசீர்வாதம், வடார்க்காடு புண்ணியகோட்டி ஆகிய பலர் கலந்துகொண்டனர்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஆறு மணி அளவில் மாநாடு இனிது முடிவுற்றது.

முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றதும், திரு. திருமலாச்சாரி அவர்களும், பிற்பகல் நிகழ்ச்சி முடிந்ததும், திரு. ஏ. கே. எஸ். சர்மா அவர்களும் நன்றி கூறினர்.

முற்பகல் முழுவதிலும் கல்வித் துறை டைரக்டர் திருவாளர் சுந்தர வடிவேலு அவர்கள் மாநாட்டில் இருந்து, நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கவனித்து, பள்ளி நிர்வாகிகளுக்கு ஊக்கமூட்டிய நற்செயல் அனைவர் உள்ளத்தையும் அள்ளிக் கொள்ளும் தன்மைபடைத்ததாக இருந்தது.

முதலமைச்சர் காமராசர் அவர்களும் முற்பகல் முழுவதும் இருந்து மாநாட்டில் ஆற்றப்பட்ட பல சொற்பொழிவுகளையும் அன்புடன் கேட்டு ஆவன புரிவதாக வாக்களித்தது குறிப்பிடத்தக்க பெருஞ் செயலாகும்.

ஆசிரியர்கட்கு வேண்டுகோள்

பேரன்பு கெழுமிய ஆசிரியர்காள்! ஆர்வமும் எழுச்சியும் மிக்க மேனேஜர்காள்! உங்களுக்கெல்லாம் ஒரு வார்த்தை.

சென்ற பதினைந்தாண்டு ஆண்டுகளாக "ஆரம்பக் கல்வி" என்னும் இத் திங்கள் இதழை நீங்கள் கண்டு வருகிறீர்கள். இதன் அரும்பணியைப் பாராட்டியும் புகழ்ந்தும் அடிக்கடி கடிதம் எழுதுகிறீர்கள். நேரில் பார்க்கும்போதோ, உள்ளம் திறந்து பேசி உவகை நிறைந்த சொற்களை வீசி எங்கள் நெஞ்சத்தைக் கவர்ந்துவிடுகிறீர்கள்.

'சுழலும் உலகம்' என்ற பகுதியைப் படித்தோம்—எங்கள் சிந்தையெலாம் மகிழ்கிறது"—இப்படிப் பலர் எழுதியிருக்கிறீர்கள்.

ஆசிரியர் குறைகளை விளக்கும் உங்கள் தலையங்கங்களைக் கண்டோம். கரையிலாக் களிப்புக் கொண்டோம்—இப்படிப் பலர் தெரிவித்திருக்கிறீர்கள்.

இதுவல்லவா ஆசிரியர் உலகத்தின் உரிமைக் குரல்—இப்படிப் பலர் இனிய நடையிலே இன்ப மொழியை வீசியிருக்கிறீர்கள்.

உண்மையிலேயே "**ஆரம்பக் கல்வி**" சென்ற 15 ஆண்டுகளாக ஆசிரியர்களின் துயரங்களைத் துடைக்கவும் ஊதியத்தை உயர்த்தவும் வேதனையை வீழ்த்தவும் வாழ்க்கையைச் சுவையுள்ளதாக்கவும் ஓயாமல் பணியாற்றி வருகிறது.

நாடு கண்டு மகிழும் உண்மை இது. ஆனால் இந்த ஏடு தொடர்ந்து நடைபெற்று, என்றென்றும் ஆசிரியர்களின் இணைபிரியாத் தோழனாகவும் இணையற்ற தொண்டனாகவும் ஒளிவீசித் திகழ வேண்டுமானால் இதன் பொருள்நிலை தள்ளாடித் தடியூன்றித் தத்தளிக்கும் தன்மை அற்றதாக இருக்கவேண்டும்.

இந்த மிக முக்கியமான காரணத்தை முன்னிட்டுத்தான் சென்ற சில ஆண்டுகளாக சில பாட புத்தகங்களை வெளியிட்டு அவற்றை ஆங்காங்கே பரப்பி வருகிறோம். அந்தப் புத்தகங்களின் விற்பனை தங்குதடையின்றி நடைபெற்றால்தான் "**ஆரம்பக் கல்வி**"யின் வீர நடையில் தளர்ச்சி தோன்றாமல் இருக்கமுடியும்.

"**ஆரம்பக் கல்வி**" ஒரு செடியானால் அந்தச் செடியை வளர்க்க ஊற்றும் தண்ணீர், நம் புத்தக விற்பனை.

எனவேதான் "**ஆரம்பக் கல்வி**"யின் வளர்ச்சியிலே அன்பும் அக்கறையும் படைத்த அனைவரும்—குறிப்பாக ஆசிரியர்களும் மானேஜர்களும்—நம் புத்தகங்களைத் தம் பள்ளிகளில் வைப்பதிலும், பிற பல பள்ளிகளில் வைக்கும்படி செய்வதிலும் ஆர்வம் காட்ட வேண்டியது அவசியமும் அவசரமுமான பணியாகிறது.

உங்களுடைய உரிமை முரசல்லவா "**ஆரம்பக்கல்வி**"—அதனுடைய வளர்ச்சி உங்களுடைய வளர்ச்சி அல்லவா—எனவே அதனுடைய செழிப்புக்கான இச் செயலில் சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் நீங்கள் ஈடுபடுவீர்கள்—தெரியும் எங்களுக்கு. என்றாலும் சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை என்பது பழமொழி அல்லவா—எனவேதான் இந்த வேண்டுகோள். ஆசிரியத் தோழர்காள், நிர்வாக நண்பர்காள், கவனமிருக்கட்டும். வணக்கம்.

தனிப்பட்டோர் நிர்வாகம்

தனிச் சிறப்புடையது!

சிறிய உள்ளம்—பெரிய பரீட்சையா?

மாநாடு பற்றி "நம் நாடு"

நமது மாநில மாநாடுபற்றி சென்னையிலிருந்து வெளி வரும், "நம் நாடு" என்னும் தின இதழ், 1–4–55 வெள்ளி யன்று, "ஒழிக பரீட்சை!" என்கிற தலைப்பின்கீழ் சிறந்ததோர் தலையங்கம் தீட்டியிருக்கிறது. அது, இது :—

கடந்த ஞாயிறன்று சென்னையில் நடைபெற்ற சென்னை மாநில ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர்–நிர்வாகிகள், நிர்வாகிகள் மாநாட்டில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மக்களுக்குக் கல்வி போதிக்கும் பிரச்சினையில், தனிப்பட்ட பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகள், ஆசிரியர்களது பணி குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

1950–51-ம் *ஆண்டுக் கணக்குப்படி, சென்னை மாநிலத்தில், அரசாங்கம்* 1,224, *நகரசபைகள்* 970, *மாவட்ட ஆட்சி மன்றங்கள்* 8,051, *பஞ்சாயத்துக்கள்* 892, *தனிப்பட்டோர்* 9,563 *என ஆரம் பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர் என்று அந்த மாநாட்டு வரவேற்புரையில் கூறப்பட்டுள்ளது.*

இந்தக் கணக்குப்படி பார்த்தால் அரசாங்கம், நகரசபைகள், மாவட்ட ஆட்சி மன்றங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகிய நால்வகை நிர்வாகங்களும் சேர்ந்து நடத்தும் மொத்தப் பள்ளிகளின் எண் ணிக்கை ஏறத்தாழ தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளின் எண் ணிக்கை அளவுதான் உள்ளது. இந்த விபரங்களே மாநிலத்தில் ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளின் பெரும் பங்கினைக் குறித்து எடுத்துக்கூற போதுமானவையாகும்.

ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் அத்தகைய முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ள தனிப்பட்டோர் பள்ளி நிர்வாகிகள், மாநாடு ஒன்றில் கூடி நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் ஆட்சியாள ரது கூர்மையான கவனத்திற்குரியவையாகும் என்றால் மிகையாகாது.

கல்வி பரப்பும் பள்ளிகள், அரசாங்கத்தாலோ அல்லது நகர சபைகள் போன்ற இதர நிர்வாகங்களாலோ ஏற்று நடத்தப்படு வதற்கு முன்னர், வெகுகாலமாகவே தனிப்பட்டோர்களால்தான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. அந்த வகையில், 'கல்வி வளர்ச்சி துரிதமாக்கப்பட வேண்டும்; நாட்டு மக்கள் அனைவரும் கல்வி பெற

வேண்டும்,' என்ற நல்ல எண்ணங் கொண்ட எந்த ஒரு அரசாங்கமும், ஆரம்பக் கல்வி வளர்ச்சியில், தொல்லைகள் பலவற்றிற்கிடையே தனிப்பட்டோர் புரிந்துவரும் நற்பணிக்கு நன்றி செலுத்தக் கடமையுடையதாகும்.

கல்வித் துறையில் நீண்ட கால அனுபவம் பெற்றுள்ள அந்தத் தனிப்பட்ட பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள் ஆகியோரது கருத்துக்கள், அரசாங்கத்தால், சுலபத்தில் நிராகரித்து விடக்கூடியவல்ல!

அந்த மாநாட்டில் நிறைவேறியுள்ள தீர்மானங்களில், உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் மட்டும் பயிலும் 12, 13 வயதுடைய இளம் மாணவர்களுக்கு அரசாங்கம் நடத்தும் ஈ. எஸ். எல். சி. பரீட்சையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதும் ஒன்றாகும்.

பொதுவாகவே அரசாங்கம் இன்று நடைமுறையில் கொண்டுள்ள பரீட்சை முறைகள் வெகுவான குறைபாடுடையவை என்ற கருத்து, பரவலாக நாட்டில் நிலவத்தான் செய்கிறது.

மாணவர்களது அறிவு வளர்ச்சியையும், தரத்தினையும் சோதிக்க அரசாங்கம் நடத்திவரும் பரீட்சைகள் நல்ல கருவிதான் என்பதை ஏற்றுக்கொள்வதில் மாறுபட்ட கருத்துடைய கல்வி நிபுணர்களும் இருக்கிறார்கள்.

பரீட்சைகள் பற்றி பொதுவான கருத்து மாறுபட்டதாக இருந்தபோதிலும், உயர்தர ஆரம்பப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பில் அரசாங்கம் நடத்தும் பரீட்சைகள், அந்த வகுப்பில் பயிலும் 12 அல்லது 13 வயதுடைய மாணவர்களின் சக்திக்கு மீறியவை என்ற கருத்தில் மாறுபட்டவர்கள் அதிக இருக்க முடியாது.

ஈ. எஸ். எல். சி. பரீட்சை எழுதவேண்டிய மாணவர்களோ 12 அல்லது 13 வயது மட்டுமே வளர்ந்த சிறார்கள்; அவர்கள், அரசாங்கம் நடத்துகிற பரீட்சையில் தோல்வி கண்டால், அதைத் தாங்கிக் கொள்ளும் உள்ளம் அவர்களுக்கு இருக்குமெனவும் எதிர் பார்க்க முடியாது. மேலும் தோல்வி கண்டவர்கள் பலர் தொடர்ந்து கல்வி பெற முடியாதவர்களாகிவிடுகின்றனர்.

அது தவிர, உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இந்த ஈ. எஸ். எல். சி. பரீட்சை நடத்தப்படுகிறது. உயர்தரக் கலாசாலைகளில், செகண்டரி பள்ளிகளில் எட்டாம் வகுப்புக்குச் சமமான மூன்றும் படிவத்தில் பயிலும் மாணவர்களுக்கு அரசாங்கம் பரீட்சை நடத்துவதில்லை.

ஒரேதரமான கல்வி பெறும் மாணவர்களில், அவர்கள் கல்வி பெறும் பள்ளிகள் வெவ்வேறாக இருப்பதினால் மட்டுமே இந்த

(85—ம் பக்கம் பார்க்க)

CONNEMARA PUBLIC LIBRARY
8 AUG 1956



சென்னை மாநில ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. K. இராமாநுஜம் பிள்ளை அவர்களின் தொண்டைப் பாராட்டி முதலமைச்சர் வெள்ளிக் கோப்பையை வழங்குகிறார்.



மாநாட்டில் பொதுச் செயலாளர், திரு. பி. வீரராகவன்
(ஆரம்பக்கல்வி ஆசிரியர்) பேசுகிறார்.

சென்னை மெமோரியல் மண்டபம்

சென்னை மாநில எயிடட் பள்ளிகளின் ஆசிரிய மானேஜர்கள்—மானேஜர்கள் மாநாடு

27—3—55

திருவாளர்

A. R. சேஷாசலம் அவர்கள்

ஆற்றிய

வரவேற்புரை

சென்னை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திரண்டு வந்திருக்கும் ஆசிரிய மானேஜர்களே! அலை அலையாகக் குழுமியிருக்கும் மானேஜர்களே! ஆர்வமும் ஆற்றலும் மிக்க அருமை நண்பர்களே! கல்வியின் வளர்ச்சியில் பேரன்பு படைத்த பெரியோர்களே!

உங்கள் அனைவரையும், இம் மாநாட்டு வரவேற்புக் குழுவின் சார்பில் மனமார வரவேற்கின்றேன். நீங்களெல்லாம் இவ்வளவு திரளாகக் கூடியிருப்பது, நாட்டின் கல்வி வளர வேண்டும் என்பதிலே, உங்களுக்கு எவ்வளவு ஆழ்ந்த அக்கரை இருக்கிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது. கல்விப் பொருளின் வளர்ச்சியிலே அனைவரும் இந்த அளவு அக்கரை காட்டுவதைக் காணும்போது, நம்முடைய நாட்டிற்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது என்கிற நம்பிக்கை யாருக்கும் ஏற்படுவது இயற்கை.

நம்முடைய மாநில மாநாடு நடைபெற்று நீண்ட காலம் ஆகிவிட்டது. அதிலும் ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்த பிறகு

நம்முடைய மாநாடு நடைபெறுவது இதுவே முதல் முறை. இத்தனைக் காலத்திற்குப் பிறகு, இத்துணை முக்கியமான நேரத்தில், இந்த மாநாடு நடைபெறுவது கண்டு நான் மிக மிக மகிழ்கிறேன்.

இந்த மாநாட்டைத் திறந்து வைப்பவர் இந்த மாநிலத்தின் முதலமைச்சர்—ஏழைகளின் தோழர்—கனம் காமராசர் என்பதை எண்ணும்போது என் மகிழ்ச்சி அளவிட முடியாததாகிறது. கனம் காமராசர், உழைப்பால் உயர்ந்த ஓர் உத்தமர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பொது நலப் பண்பு படைத்தவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உள்ளத் தூய்மை நிறைந்தவர். தனக்கென்று ஒரு குடும்பம்கூட ஏற்படுத்திக் கொள்ளாமல், திருமணம்கூட செய்து கொள்ளாமல், பொது வாழ்வுப் பணியிலேயே தன் வாழ்வை ஈடுபடுத்திவிட்ட தனிச் சிறப்பு வாய்ந்தவர். ஆரம்ப ஆசிரியர்களின் நல் வாழ்விலேயும், எயிடட் மானேஜர்களின் முன்னேற்றத்திலேயும், கல்வித் துறையின் நல் வளர்ச்சியிலேயும் மிகுந்த அன்பு நிறைந்தவர்.

இத்தகைய முதலமைச்சரால் திறந்து வைக்கப்படும் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிப்பவரோ, இந்தத் தென்னாட்டின் முது பெரும் தலைவர்களிலே ஒருவர். தமிழ் நாடு என்னும் பெயருடைய நாள் இதழையும், கிழமை இதழையும் நடத்தி, தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய தனிச் சிறப்பு மிகுந்தவர். சென்ற நாற்பதாண்டுக் காலமாக, அரசியல்—சமூக இயல் — சீர்திருத்த இயல் முதலிய பல்வேறு துறைகளின் மூலமாகப் பொது நலப் பணியாற்றி வரும் அண்ணல். ஆம் டாக்டர் வரதராசலு நாயுடு—அந்த அஞ்சாத நெஞ்சு படைத்த அடலேறு—அந்த அறப்போர்ச் செம்மல்தான் இந்த மாநாட்டின் தலைவர். இவரைவிடச் சிறந்த ஓர் வழிகாட்டி வேறு யார் இருக்க முடியும்?

அரசாங்கமும் எயிடட் பள்ளிகளும்

சென்னை மாநிலத்தில் உள்ள எயிடட் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வரும் மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்களின் மாநாடு இது. இந்த மாநிலத்தின் கல்வித் துறையிலே எயிடட் பள்ளிகள் ஆற்றியுள்ள பணி தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்ததாகும். இந்த மாநிலத்தில் முதல் முதல் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கியவர்கள், எயிடட் நிர்வாகிகளே ஆவர். ஜில்லா போர்டுகள் முனிசிபாலிடி

கள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் இந்தத் துறையில் நுழைவதற்கு முன்னாலேயே, கிழக்கிந்தியக்கம்பெனியார்கள் இந்த நாட்டை ஆட்சி புரிந்து வந்த அந்தப் பழங் காலத்திலிருந்தே, எயிடட் நிர்வாகிகள்தான் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர். முன் நாளிலும் சரி, இப்போதும் சரி, மொத்தமுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஏறத்தாழ பாதிப் பள்ளிகளை எயிடட் நிர்வாகிகள் தான் நடத்தி வருகின்றனர். கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து இந்த உண்மை தெளிவாக விளங்கும்.

1950—51

நடத்துபவர்கள்	பள்ளிகளின் எண்ணிக்கை
அரசாங்கம்	1224
முனிசிபாலிடி	970
ஜில்லா போர்டு	8051
பஞ்சாயத்துக்கள்	892
எயிடட்	9563
மொத்தப் பள்ளிகள்	20,700

அரசாங்கம், முனிசிபாலிடி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்துப் போர்டு ஆகிய நால்வகை நிர்வாகங்களும் சேர்ந்து மொத்தம் எத்தனைப் பள்ளிகளை நடத்திவருகின்றனவோ, அதே அளவு பள்ளிகளை எயிடட் நிர்வாகம் மட்டும் நடத்திவருகிறது. எனவே ஆரம்பக் கல்வி இன்றையதினம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு, எயிடட் நிர்வாகம், மிக முக்கியமானதோர் காரணம் என்பதை எவரும் மறுத்துவிட இயலாது.

முனிசிபாலிடி ஜில்லா போர்டு முதலிய உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் வகுப்பு ஒன்றிற்கு சராசரி 50-60 பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால் எயிடட் பள்ளிகளிலோ வகுப்புதோறும் சராசரி 20 பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் காரணத்தால், எயிடட் பள்ளிகளில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஒவ்வோர் மாணவரையும் ஆசிரியர் தனித்தனியே கவனிக்கவும் முடிகிறது. அளிக்கப்படும் பயிற்சியும் சிறந்ததாக அமைகிறது.

ஏனைய நிர்வாகங்களுக்கு இல்லாத மற்றோர் சிறப்பும் எயிடட் நிர்வாகங்களுக்கு உண்டு. எயிடட் பள்ளிகளில், ஒவ்வோர் பள்ளியையும், ஒவ்வோர் மேனேஜர், நேரிடையாக இருந்து, கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வருகிறார். அவருடைய வாழ்க்கையிலே இரண்டறக் கலந்துவிட்ட ஓர் அமைப்பாக அது இருந்து வருகிறது. அதனுடைய வாழ்வும் தாழ்வுமே தன்னுடைய வாழ்வும் தாழ்வும் என்று அவர் மனப்பூர்வமாக எண்ணுகிறார். இப்படிப்பட்ட நெருக்கமான நேர்முகத் தொடர்பு ஜில்லா போர்டு முதலிய மற்ற நிர்வாகங்களில் இருக்கமுடியாது.

இவ்வளவு சிறப்புடனும் செம்மையாகவும் நடைபெற்று வரும் எயிடட் நிர்வாகத்தைக் கலைத்துவிட்டு, எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே நேரடியாக எடுத்து நடத்தவேண்டும் என்று ஒரு சிலர் சென்ற சில ஆண்டுகளாக இயம்பிவருகின்றனர். இப்படிச் செய்வது சிறிதும் இயலாத காரியம் மட்டுமல்ல, அவசியமற்ற மாறுதல் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் படிக்கவேண்டிய வயதுடைய பிள்ளைகள், நம் மாநிலத்தில், சுமார் 50 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் சுமார் 30 லட்சம் பேர்தான் இப்போது பள்ளிக்கூடம் செல்கிறார்கள். மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளுக்கு இனிமேல்தான் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இப்போது படித்து வரும் 30 லட்சம் பிள்ளைகளுக்காக 21400 பள்ளிகள் இப்போது இருந்துவருகின்றன. பள்ளி ஒன்றிற்கு சுமார் 140 பிள்ளைகள் வீதம் இதுபோது படித்து வருகிறார்கள். இதே கணக்குப்படிப் பார்த்தால், மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளுக்காக சுமார் 15,000 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தற்போது பயின்று வரும் 30 லட்சம் பிள்ளைகளை 94,000 ஆசிரியர்கள் பயிற்றுவித்து வருகிறார்கள். இதே விகிதப்படி பார்த்தால், மிச்சமுள்ள 20 லட்சம் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கப் புதிதாக 60,000 ஆசிரியர்கள் தேவை. 94,000 ஆசிரியர்களைக் கொண்ட 21,400 பள்ளிகளுக்காக இப்போது சுமார் 5 கோடி ரூபாயை அரசாங்கம் ஆண்டுதோறும் செலவிட்டு வருகிறது. மேலும் 60,000 ஆசிரியர்களைக் கொண்ட 15,000 பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமானால், அவற்றிற்கு ஆண்டுதோறும் மேலும் 3 கோடி ரூபாய் செலவாகும். இப்போதுள்ள

எயிடட் நிர்வாகங்களை அப்படியே வைத்துக்கொண்டு, படிப்பறி வின்றி உள்ள பிள்ளைகளுக்குப் படிப்பைச் சொல்லிக் கொடுக்க முனைந்தாலே இவ்வளவு செலவு ஏற்படும். இப்படியின்றி, இந்தப் பணியோடு பணியாக, எயிடட் நிர்வாகத்தில் ஏற்கனவே உள்ள பள்ளிகளையும் அரசாங்கப் பள்ளிகளாக மாற்றத் தொடங்கினுல், அதற்கென்று வேறு பல கோடி ரூபாய்கள் செலவாகும். இவ்வளவு பெருஞ் செலவைப் புதிதாக மேற்கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை என்பது வெள்ளிடைமலை. எனவேதான் நான் கூறுகிறேன், எயிடட் பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றுவது அவசிய மற்ற வேலை. இப்போது அரசாங்கத்தார் செய்யவேண்டியதெல் லாம், புதிதாகப் பல பள்ளிகளை ஏற்படுத்தி, படிக்காமலிருக்கும் பிள்ளைகளைப் படிக்கவைப்பதுதான். கிடைக்கும் பணத்தையெல் லாம் இந்த அரிய செயலுக்குத்தான் பயன் படுத்த வேண்டுமே தவிர, நிர்வாகத்தை மாற்றும் தேவையற்ற முயற்சியில் அதனைச் செலவிடுவது பெருங் குற்றம் என்றே நான் கருதுகிறேன். எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கூடம் செல்கின்றனர் என்கிற நிலை ஏற்பட்ட பிறகு, அத்தகு நிலைமையை உருவாக்குவதற்குத் தேவையான பள்ளிக்கூடங்கள் அத்தனையும் ஏற்பட்ட பிறகு, அன்றைய நிலை யில், தேவைப்பட்டால், எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கம் மேற் கொள்ள யோசிக்கலாமே தவிர, இப்போது, இதற்கு அவசியம் துளியும் இல்லை. எயிடட் நிர்வாகிகளில் இரண்டொருவர் தவறு தலாக நடந்திருக்கலாம். அதற்காக எயிடட் நிர்வாகம் என்கிற அமைப்பையே கலைக்க முயல்வது எவ்வாறு நியாயமாகும்?

ஆசிரியர்களின் குறைகள்

அடுத்தபடியாக நம்முடைய கவனத்தைக் கவரும் பிரச்சினை ஆசிரியர்களும் அவர்களுடைய குறைகளும் என்பதாகும். "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆவான்" என்று எல்லோரும் பாராட்டுகிறுர் கள். நாளைய பிரஜைகளை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள் ஆசிரியர் களே என்று அத்தனைபேரும் இயம்புகிறுர்கள். ஆசிரியத் தொழிலே அரும்பெரும் தொழில்—இப்படிச் சொல்லாதவர்கள் யாரும் இல்லை. ஆனுல் இப்படியெல்லாம் பாராட்டப்படுகிற ஆரம்ப ஆசிரியரின் வாழ்க்கை நிலையோ வேதனையின் வடிவமாக இருக்கிறது.

வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனைப் புயலில் சிக்குண்டு வாடித் தவிக்கிறது ஆசிரியரின் குடும்பம். சுண்டிச் சோர்ந்த முகமும், வாடித் தவிக்கும் உள்ளமும் படைத்தவராய், நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்று வேதனைக் கீதம் பாடிக் கிடக்கின்றனர் ஆசிரியத் தோழர்கள். இந்த நிலையிலேயே அவர்கள் தொடர்ந்து இருந்தால், அவர்களால் தரப்படும் பயிற்சியின் தரம் குறைந்துவிடும் என்பதில் ஐயப்பாடு ஏது? எனவே, அவர்களுடைய அடிப்படை ஊதியம் உடனடியாக மாதம் 20 ரூபாயாவது உயர்த்தப்படவேண்டும். அதாவது லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 30/— ஹயர் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 50/— ஸெகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 60/— உடனடியாக ஆதாரச் சம்பளம் உயர்த்தப்படவேண்டும். இந்த அளவுக்காவது அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படாவிட்டால், அவர்களுடைய வேதனை தீராது. அந்த வேதனை தீராவிட்டால், மாணவர்கள் பெற்று வருகிற கல்வியின் தரமும் உயராது.

ஆரம்ப ஆசிரியர்களின் நிலையைச் சிறிதளவாவது உயர்த்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, சென்னை அரசாங்கத்தார், வேலையிலிருந்து ஓய்வு பெறும் ஆரம்ப ஆசிரியர்கட்கு, அவர்கள் அப்போது பெற்றுவரும் ஊதியத்தில் கால்பகுதியை, மாதந்தோறும் பென்ஷனாகத் தருவது என்று முடிவு செய்திருக்கின்றனர். இந்த முடிவை நான் மனமார வரவேற்பதோடு, இத்தகு முடிவுக்கு வந்த அரசாங்கத்தாரின் பேரன்புக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில், ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தாமல், பென்ஷன் ஏற்பாட்டை மட்டும் செய்துவிடுவதால், ஆசிரியர்களின் இன்றைய நிலைமை எந்தவிதத்திலும் உயர்ந்துவிடாது என்பதை எடுத்துக் காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகிறது. ஆசிரியர்கள் வேலையை விட்டு ஓய்வு பெற்ற பிறகு—அதாவது 60வது வயதுக்கு அப்புறம் தான் இந்தப் பென்ஷன் கிடைக்கும். ஆனால் அதுவரையில் ஆசிரியர்களின் நிலை என்ன ஆவது? எனவே, உடனடியாக, ஆசிரியர்களின் ஊதியத்தை, கணிசமான அளவு உயர்த்துவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். ஊதியத்தை உயர்த்துவதோடு, பென்ஷன் தொகையையும், சம்பளத்தில் கால்பகுதி என்பதை, அரைப்பகுதியாக உயர்த்த வேண்டும்.

ஆசிரியர்களின் வயது

ஆசிரியர்களைப்பற்றி மற்ருேர் பிரச்சினை. போதுமான அளவு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்காக, அவர்கள் ரிடயர் ஆகும் வயதை 62 ஆக உயர்த்தி ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளனர் அரசியலார். ஆனல் இந்த உத்தரவு 1954–55–ம் ஆண்டுக்கு மட்டும்தான் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனல் ஆசிரியர்கள் கிடைக்காத நெருக்கடி தொடர்ந்து இருப்பதாலும், இந்த நெருக்கடி மேலும் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கும் ஆதலாலும், இந்தத் தற்காலிக உத்தரவை நிரந்தரமானதாக்க வேண்டும் என்று அரசியலாரை வேண்டிக் கொள்கிறேன்.

ஒரே வகைத் தகுதி படைத்தவர்களாக இருந்தாலும், பல்வேறு நிர்வாகங்களின் கீழ்ப் பணியாற்றும் ஆரம்ப ஆசிரியர்கட்கு, பலவித ஊதிய விகிதங்கள் இப்போது தரப்பட்டு வருகின்றன. இந்த நிலையை மாற்றி, நிர்வாகம் எதுவாயினும் சரி, ஒரே விதத் தகுதி இருந்தால் ஒரே வித ஊதியம் என்கிற ஏற்பாட்டைக் கொண்டுவர வேண்டும் அரசியலார்.

E. S. L. C. பரீட்சை ஒழிப்பு

மூன்ருவதாக நாம் கவனிக்கவேண்டிய பிரச்சினை E. S. L. C பரீட்சை என்பது ஆகும். சின்னஞ் சிறு பிள்ளைகளுக்கு இப்படி ஒரு பரீட்சை தேவையில்லை என்பதே ஆசிரியர்கள், மானேஜர்கள் ஆகியோரின் முடிந்த முடிபாகும். அன்றலர்ந்த செந்தாமரைகள் போன்ற சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு—11, 12, 13 என்பன போன்ற வயது படைத்த சிறுவர் சிறுமியர்க்கு இப்படி ஒரு பரீட்சை அவசியமா? அந்த இளைய குழந்தைகளால் இந்தக் கடினமான பளுவைத் தாங்க முடியுமா? முடியாது என்றே நான் கருதுகிறேன். இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த சென்ற 12 ஆண்டுகளாகவே நான் பார்த்து வருகிறேன். ஒவ்வோர் ஆண்டிலும், இந்தப் பரீட்சையில் தரப்படுகிற கேள்வித்தாள்கள், இந்தச் சிறு பிள்ளைகளால் விடை எழுதமுடியாத வகையிலேயே இருந்துவருகின்றன. இந்தப் பரீட்சை எழுதும் பிள்ளைகளில் மிகப் பலர் ஏழைகள். எனவே ஒருமுறை பரீட்சையில் தவறிவிட்டால் மேற்கொண்டு

அவர்களால் படிக்கமுடிவதில்லை. இந்தப் பரீட்சையை முடிக்காம லிருந்தாலோ அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எளிதில் விடை எழுத முடியாத வகையில் அமைந்துள்ள இந்தப் பரீட்சை, ஏழைப் பிள்ளைகளுக்குப் பெரியதோர் தலைவலியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது சிறிதும் மிகையாகாது. எனவே இந்தப் பரீட்சையை ஒழித்துக் கட்டுவதே மிகவும் நல்லது.

ஒருக்கால் இந்தப் பரீட்சை இருந்தே தீரவேண்டும் என்று அரசாங்கத்தார் கருதுவதாக இருந்தால், உயர்தர ஆரம்பப் பள்ளி களுக்கு மட்டும் என்று இல்லாமல், உயர் நிலைப்பள்ளிகள், செகண் டரி பள்ளிகள் ஆகியவற்றில் பயில்கிற பிள்ளைகளுக்கும் இந்தப் பரீட்சை வைக்கப்படவேண்டும். ஆரம்பப் பள்ளிகளின் எட்டாவது வகுப்பு தாழ்ந்தது என்றும், செகண்டரி பள்ளிகளின் மூன்றாவது படிவம் உயர்ந்தது என்றும் இப்போது உள்ள நிலைமை ஒழிக்கப் பட்டு, எட்டாவது வகுப்பு—மூன்றாவது படிவம்—இரண்டும் ஒன்று தான் என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால், இருவகைப் பள்ளி களில் பயில்பவர்க்கும் ஒரே வகைப் பரீட்சை ஏற்படுத்தப்பட வேண்டும். இருந்தால் இரு சாராருக்கும் அந்தப் பரீட்சை இருக் கட்டும். இல்லையேல் இரு சாராருக்கும் அது இல்லாமல் போகட்டும்.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் உள்ள 6, 7, 8 வகுப்புகளுக்கும், செகண்டரி பள்ளிகளில் உள்ள 1, 2, 3 வது படிவங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமையை உடனே ஒழித்துக்கட்ட வேண் டியது மிகவும் அவசியம். இப்படி ஒரு வேற்றுமை இருக்கும் காரணத்தால், ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பை முடித்த வர்கள், செகண்டரி பள்ளிகளில், 4—வது படிவத்தில் சேர்த்துக் கொள்ளப்படாமல், ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள் குறைத்தே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இதனால், படித்த வகுப்புகளி லேயே மீண்டும் ஒருமுறை படித்தாக வேண்டிய நெருக்கடியும், அதனால் வீண் பணச் செலவும், மாணவர்களுக்கு ஏற்படுகிறது. படித்து முடிந்த வகுப்புகளிலேயே மாணவர்களை மீண்டும் படிக்க வைப்பதால் யாருக்கு என்ன நன்மை என்பதுதான் எனக்குப் புரிய வில்லை.

ஒருவேளை E. S. L. C. பரீட்சை தொடர்ந்து இருக்குமானால், அந்த விடைத் தாள்களைத் திருத்தும் பொறுப்பு உயர்தர ஆரம்பப்

பள்ளிகளிற் பணியாற்றும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கே தரப்படவேண்டும். ஆரம்பப் பள்ளி மாணவர்களிடம் நெருங்கிப் பழகும் அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் வேறு எவரிடமோ ஒப்படைப்பது எப்படி முறையாகும்?

மாதந்தோறும் நஷ்டஈடு கொடுத்தல்

அடுத்தாற்போல, எயிடட் பள்ளிக்கூட நிர்வாகிகளைப்பற்றி இரண்டோர் சொற்கள் இயம்பவேண்டியது என்னுடைய கடமையாகும்.

ஆதித் திராவிட வகுப்புப் பிள்ளைகளும், என். ஜி. ஓக்களின் பிள்ளைகளும், ஏழைச் சிறுமிகளும், ஆரம்பப் பள்ளிகளில் கட்டணம் செலுத்தாமல் கல்வி பயிலலாம் என்று அரசாங்கத்தார் ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதன்விளைவாகப் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு மாதந்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைந்து விடுகிறது. எயிடட் நிர்வாகிகளுக்கு, அரசாங்கத்தார் தந்துவருகிற கிராண்டுகளையும், மாணவர்கள் செலுத்துகிற கட்டணங்களையும் தவிர வேறு வருமானம் எதுவும் கிடையாது. 350 பிள்ளைகளைக் கொண்ட ஒரு பள்ளிக்கூடத்தில், 100 பிள்ளைகள் ஆதித் திராவிட வகுப்பினராகவும் 100 பிள்ளைகள் என். ஜி. ஓக்களின் குழந்தைகளாகவும், 25 பேர் ஏழைச் சிறுமிகளாகவும் இருந்து விட்டால், மிச்சமுள்ள 125 பிள்ளைகளிடமிருந்து மட்டும்தான், நிர்வாகிகள், கட்டணத்தை வசூலிக்கமுடியும். ஆனால் மாதந்தோறும், நிர்வாகிகள் செய்து தீரவேண்டிய செலவுகளோ, பல வகையினவாகவும், ஏராளமாகவும் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு ஊதியம், வேலைக்காரிகள்—ஆயாக்கள்—தோட்டிகளுக்குச் சம்பளம், கைத்தொழிற் பயிற்சிக்குத் தேவையான பண்டங்கள் வாங்குவது, ஆசிரியர்களின் பிராவிடண்ட் பண்டுக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய தொகை, பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு வாடகை, கல்விப் பயிற்சிக்குத் தேவையான கருவிகள் பண்டங்கள் மேசை நாற்காலிகள் வாங்குவது, வீட்டு ரிப்பேர் முதலிய பல்வேறு செலவுகளை மாதந்தோறும் நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தார், சலுகைபெற்ற மாணவ மாணவியரின் சம்பளத்திற்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையை மூன்றுமாதங்களுக்கு ஒரு முறைதான் தருகிறார்கள். செலவோ, மாதாமாதம் செய்து தீரவேண்டியிருக்

கிறது. வரவோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறைதான். இந் நிலையில், எயிடட் நிர்வாகிகள், செலவைச் சரிக்கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும். அரசாங்கத்தார் அறிவித்துள்ளபடி, எட்டாவது வகுப்பு வரையில், எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டம் அமுலுக்குவருகிற அடுத்த ஆண்டு முதல், எயிடட் நிர்வாகிகளுக்கு மாதந்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம் இன்னமும் குறைந்துவிடும். அவர்களுடைய பண நெருக்கடி இன்னமும் சற்று அதிகமாகிவிடும். இந்தக் காரணங்களையெல்லாம் முன்னிட்டு, சம்பளச் சலுகைகளுக்காகத் தரவேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை மாதந்தோறும் அளிக்க அரசியலார் ஏற்பாடு செய்யவேண்டும் என்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்விப் பயிற்சியை அளிப்பதோடு நில்லாமல், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், பலவகையான நிர்வாக வேலைகளைச் செய்துதீர வேண்டியிருக்கிறது. சென்சஸ் எடுப்பது, மாதாந்தரக் கணக்குகளை அனுப்புவது, பள்ளிக்கூட கணக்குகளைத் தயாரிப்பது, ஆசிரியர்களுக்கு ஊதியம்அலவன்ஸ் முதலியவற்றைக் கொடுப்பது,ப்ராவிடண்ட்பண்ட் கணக்குகளைத் தயாரிப்பது, வருஷாந்திர அறிக்கை—இன்ஸ்பெக்ஷன் அறிக்கை—ஸ்டாக்னேஷன் அறிக்கை—E. S. L. C. அறிக்கை முதலியவற்றைத் தயாரிப்பது, சம்பளச் சலுகைகள் பற்றிய அறிக்கை தயாரிப்பது முதலிய பற்பல வேலைகளை நிர்வாகிகள் செய்ய வேண்டி வருகிறது. இத்தனை வேலைகளையும் ஆசிரியர்களே செய்து வருவதாயிருந்தால், அவர்களுடைய நேரமும் கவனமும் இவற்றில் திருப்பப்பட்டு, அவர்களால் அளிக்கப்படவேண்டிய கல்விப் பயிற்சியின் தரம் குறைந்துவிடும். எனவே, 300 பேருக்குக் குறையாத மாணவர்களைக் கொண்ட ஒவ்வோர் எய்டட் ஆரம்பப் பள்ளிக்கும், ஒவ்வொரு குமாஸ்தா வைத்துக் கொள்வதற்குத் தேவையான பண உதவியை அரசாங்கம் தருமானால் மிகவும் நலமாயிருக்கும்.

இறுதியாக, ஆரம்பக் கல்வித் திட்டத்தில் எத்தகைய மாறுதல்கள் செய்யப்படவேண்டும் என்பதைப்பற்றியும், அந்த மாறுதலோடு தொடர்புடைய இரண்டோர் பிரச்சினைகளைப் பற்றியும் என்னுடைய

கருத்தைத் தெரிவித்து, அந்த அளவோடு என்னுடைய வரவேற்புரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதாரப் பள்ளிகள்

கல்விச் சீரமைப்பைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய முதல் பிரச்சினை, ஆதாரக் கல்வியாகும். ஆளுக்கு ஒரு விதமாகவும், வேளைக்கு ஒருவகையாகவும் பேசி வருகிறார்களே தவிர, இன்னது தான் ஆதாரக்கல்வி என்று திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் வரையறுத்துக் கூறியவர்கள் இதுவரை யாரும் இல்லை. மாணவர்களின் படிப்புக்காகச் செலவாகும் பணத்தை மாணவர்களே தேடிக்கொள்வது—அதுவும் அந்தப் படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வதுதான் ஆதாரக் கல்வி என்கிறார்கள் ஒரு சிலர். படிப்புக்காக ஆகும் செலவை படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வது என்பது ஒருநாளும் நடக்காத காரியம். இதுவரையில், இந்த மாநிலத்திலும் சரி, வேறு மாநிலங்களிலும் சரி, ஆதாரப் பள்ளிகள் எத்தனையோ தொடங்கப்பட்டிருக்கின்றன. எந்த ஆதாரப் பள்ளியிலாவது, அந்தப் பள்ளிக்கூடத்திற்காகும் செலவு முழுவதையும், அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகளே, அவர்களுடைய கல்வியின் மூலமாகவே தேடித்தந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். இல்லாத ஊர்களிலெல்லாம் ஆரம்பப்பள்ளிகளைத் தொடங்குவதும், இருக்கும் ஊர்களில் அந்தப்பள்ளிகளின் நிலைமையை உயர்த்துவதும்தான் நம்முடைய முதற்பெரும் கடமைகளாக இருக்கவேண்டுமே தவிர, ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றிக்கொண்டிருக்கும் காரியத்தில் நம்முடைய நேரத்தையோ நினைப்பையோ செலவிடுவது, தேவையில்லாத செயல் மட்டுமல்ல, தீதான திட்டமும் ஆகும்.

ஒழுக்கக் கல்வி தேவை (Moral Instruction)

பள்ளிக்கூடங்களில் மதக் கல்வியை நுழைத்தாலென்ன என்று சிலர் கேட்கின்றனர். பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிகளில் இருப்பார்கள். எந்த ஒரு மதத்தின் கொள்கைகளைக் கற்பித்தாலும் ஏனைய மதத்தவர்களின் மனம் புண்படும். எந்த மதத்தையும் சேராத மதக்கல்வி என்பதாக ஒன்று இருக்கவும் முடி

யாது. இங்கிலேயில் மதக் கல்வியைப் பள்ளிக்கூடங்களில் புகட்டினுல் வீண் பூசலும் பகையும்தான் வளரும். மதக் கல்வியை அறவே விட்டுவிட்டு, எல்லா மதத்தவர்க்கும், மதங்களேயே சாராதவர்க்கும் பொதுவாக உள்ள ஒழுக்கக் கோட்பாடுகளே வற்புறுத்தும் சமுதாய ஒழுக்கக் கல்வி (Moral Instruction)யைப் புகட்டுவதே சாலச் சிறந்த ஏற்பாடாகும்.

ஜில்லா கல்விச் சபைகள் தேவை

மேல் நாடுகளில், ஒவ்வொரு மாணவனின் மனப்போக்கு, திறமை, தகுதி இவற்றைத் தனித் தனியாகக் கவனிக்கிறார்கள். அந்தந்த மாணவனுக்கு ஏற்ற கல்வி முறையை வகுத்து, அதுபற்றிய விவரங்களைப் பெற்றோர்களுக்கும் அறிவித்து, எதிர்காலத்தில் அவன் எந்தத் துறையில் சிறப்படைய முடியும் என்பதையும் கவனித்து, அதற்கு ஒத்த வகையில் அவனுக்குப் பயிற்சியளிக்கின்றனர் அங்கே. ஆனால் இங்கோ, இத்தகைய முயற்சியை, நாம் இன்னமும் தொடங்கக்கூட இல்லை.

அங்கெல்லாம் மாணவர்கள் தங்களுடைய தனிப்பட்ட திறமைகளையும் விருப்பங்களையும் கருத்துக்களையும் தெரிவிப்பதற்குத் தேவையான வாய்ப்புகள் ஏராளமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே, யாராவது ஒரு மாணவன், தன்னிடம் அமைந்திருக்கிற இயற்கைத் திறமை யொன்றைத் தானாக வெளிப்படுத்த முன்வந்தாலும், அவனை அடங்காப் பிடாரி என்று பட்டம் சூட்டி மூலையில் தள்ளி முடங்கவைத்து விடுகிறோம்.

இப்படியெல்லாம் பலவகையான குறைபாடுகளை உடையதாக இருக்கிறது இந் நாட்டில் நிலவி வரும் கல்வி முறை. இந்தக் குறைகளெல்லாம் தீரவேண்டுமானால், கல்வித் துறையிலே, நாம், நம்முடைய சிந்தனையைச் சற்றுத் தீவிரமான அளவுக்குச் செலுத்தித்தான் ஆகவேண்டும்.

நம் நாட்டுக் கல்விமுறை, குறைபாடுகள் அற்றதாக மாற்றியமைக்கப்படவேண்டுமானால், முதலில் நாம் செய்யவேண்டிய காரியம், சமுதாயத்தின் தலைசிறந்த அறிவாளிகளை ஆசிரியத் தொழிலில்

சுடுபடுகிறார்கள் என்று சொல்லத்தக்க நிலையை ஏற்படுத்துவதுதான். நிலைமை இந்த விதமாக மாறவேண்டுமானால், ஆசிரியர்களுக்கு, இப்போது அளிக்கப்படுவதைவிட மிகவும் சிறந்த ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியத் தொழில் மிகவும் மதிப்புள்ளதாகவும், எல்லோராலும் விரும்பப்படுவதாகவும், அந்தஸ்தும் செல்வாக்கும் நிறைந்ததாகவும் ஆக்கப்பட வேண்டும். கண்ணியமான ஊதியமும், கணிசமான செல்வாக்கும் படைத்ததாக ஆசிரியத்தொழில் மாற்றப்பட்டால்தான் திறமை மிகுந்தவர்கள் அந்தத் தொழிலுக்கு வருவர். கல்வியின் தரமும் அப்போதுதான் உயரமுடியும். இன்றியமையாத வாழ்க்கைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்குத் தேவையான பணம்கூட இல்லாமல் திண்டாடும் நிலையில் ஆசிரியர்களை நிற்கவைத்துவிட்டு, அவர்களிடமிருந்து கிடைக்கும் கல்வி மட்டும் உயர்தரமானதாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால், அது எப்படி முடியும்?

ஆசிரியர்களின் நிலையை உயர்த்த வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதே அளவுக்கு, கல்வித்துறையில் அரசாங்கத்தின் தலையீடு அடிக்கடி நேரிடாதபடி பார்த்துக் கொள்வதும் அவசியமாகும். நான் அழுத்தந் திருத்தமாகவே தெரிவிக்க ஆசைப்படுகிறேன்: கல்வித்துறையானது தனிப்பட்ட நிர்வாகங்களின் பொறுப்பில் இருக்கவேண்டுமே தவிர, அரசாங்கத்தின் நேரடி ஆதிக்கத்தில் நிச்சயமாக இருக்கக் கூடாது. இது, ஜனநாயக நாடு. ஆளும் கட்சிகள் அடிக்கடி மாறக்கூடிய நிலை இங்கே உண்டு. ஒவ்வோர் கட்சிக்கும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை இருக்கக்கூடும். இந்த நிலையில், அரசாங்க ஆதிக்கத்தில் கல்வித் துறை இருக்குமானால், அந்தத் துறையில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டு குழப்பம்தானே உண்டாகும்? அதுமட்டுமல்ல. தனிப்பட்ட நிர்வாகங்களின் கீழ் உள்ள பள்ளிகளில், அதிலும் குறிப்பாகக் கிறித்தவ மிஷன்களின் பள்ளிகளில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கல்வியின் தரமும உயரியதாகஉள்ளது. ஒவ்வோர் மாணவர் மீதும் சிறப்பான கவனம் செலுத்தப் படுகிறது. அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் இந்தச் சிறப்புகள் இடம் பெறுவதில்லை. ஆகையால்தான் கூறுகிறேன். கல்வித் துறையைத் தனிப்பட்ட நிர்வாகங்களிடம் இருக்கவிடுவதே சிறந்த முறை.

மேல் நாடுகளில் இருப்பதைப் போன்ற கல்விச் சபைகளை ஏற்படுத்தி, கல்வித்துறையைப் பற்றிய முழுப் பொறுப்பையும் அவற்றிடம் ஒப்படைக்கலாம். இந்தக் குழுக்களின் பணியையும் முறையையும் வரையறுக்கும் சில விரிவான சட்ட திட்டங்களைமட்டும்

அரசாங்கத்தார் வகுத்துவிட்டு, மற்றபடி முழு சுதந்தரத்தை அந்தக் குழுக்களுக்கு அளித்துவிடலாம்.

ஆரம்பக் கல்வியைப் பற்றிச் சில வார்த்தைகள். தொடக்க வகுப்புகளில் சின்னஞ்சிறு குழந்தைகளே பயில்வதால், அந்த வகுப்புகளில், எழுதுவது படிப்பது கணக்குப் போடுவது ஆகிய மூன்றை மட்டுமே கற்றுக்கொடுத்தால் போதும் என்று நான் கருதுகிறேன். சிறிய குழந்தைகளின் இளைய மூளைகளின்மீது பலவகையான பாடங்களைத் திணித்து அவர்களை வாடவைப்பது முறையல்ல என்பது என் கருத்து.

பள்ளிக் கூடங்களில் மதக் கல்வி தேவையில்லை. சமுதாயத்தில் எப்படிப் பழகுவது என்பதை விளக்கிக் காட்டும் ஒழுக்கக் கல்வியை (Moral Instruction) மட்டும் போதித்தால் போதும். குறைந்தது 18 வயதாவது நிரம்பாத மாணவர்களுக்கு, மதக்கோட்பாடுகளைப் புகட்டுவது சிறிதும் நியாயமல்ல.

கட்டாய ஆரம்பக் கல்வி நாடு முழுவதிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும். 14 வயது வரையுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வியும் பகல் உணவும் இலவசமாக அளிக்கப்படவேண்டும். தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டாலும் சரி, அரசாங்கத்தால் நடத்தப்பட்டாலும் சரி, ஆரம்பப் பாடசாலைகளுக்கு, அதிகப்படியான பண உதவி செய்யப் படவேண்டும். இளம் மாணவர்களின் உடல் நலத்தைக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வளர்ப்பதற்காகக் **குழந்தை நல விடுதிகள் (Child Welfare Centres)** ஆங்காங்கே ஏற்படுத்தப்படவேண்டும். உடல் அல்லது உள்ளத்தின் வளர்ச்சியில் குறைபாடுடைய குழந்தைகளை வளர்க்க **குழந்தை மருத்துவ மனைகள் (Child clinics)** நாடெங்கும் நிறுவப்படவேண்டும்.

மேல்நாடுகளில் இருப்பதைப்போல, ஒவ்வோர் வட்டாரத்திலும், பெற்றோர்கள், தங்களுடைய கழகங்களை அமைத்து, அந்தக் கழகங்கள் மூலமாகவே பள்ளிக்கூடங்களைத் தொடங்கும்படி ஊக்கமளிக்கவேண்டும்.

சிறிய வகுப்புகளில் பெண்களே அதிக அளவில் ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டும். சிறு குழந்தைகளுக்குத் தேவையான தாய்மை அன்பும், பொறுமையும், நிதான உணர்ச்சியும் அவர்களிடமே அதிகமாக இருக்கின்றன.

பற்பல மாணவர்களின் வெவ்வேறு தன்மைகளுக்கும் ஏற்ற தாக இருக்கும் வகையில் கல்வித் திட்டம் பல வகையினதாகவும் விரிவானதாகவும் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

போதுமான கட்டிட வசதியும், தேவையான பண்டங்களும் கருவிகளும் பள்ளிக்கூடங்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தனியாகச் சில ஆரம்ப ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும்.

ரயில்வே, தபால் துறை ஊழியர்களுக்குத் தரப்படும் பல்வேறு விசேஷ உரிமைகளும் வசதிகளும் ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டும்.

வேறு வழியில்லை என்றாலொழிய, ஆசிரியர்களையும் தலைமை யாசிரியர்களையும் ஊர்விட்டு ஊர் மாற்றக்கூடாது. அவர்களை அடிக் கடி மாற்றுவதால் குழந்தைகளின் கட்டுப்பாட்டு உணர்ச்சி குலைந்து விடுகிறது.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் போதுமான வசதிகளோடு கூடிய விளையாட்டு மைதானம் நிச்சயம் இருக்கவேண்டும்.

பள்ளிக்கூடச் சுவர்களுக்கு இடையேயே கல்வி முழுவதையும் புகட்டிவிடாமல், மாணவர்களை, பள்ளிக்கூடத்திற்கு வெளியேயும் அழைத்துச் செல்லவேண்டும்.

தன்னையும், வீட்டையும், வீதியையும் சுகாதார முறைப்படி வைத்துக்கொள்வது எப்படி என்பதை ஒவ்வொரு மாணவனுக்கும் அறிவிக்கவேண்டும்.

ஆமாம் நண்பர்களே—செய்யப்படவேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்து முடிக்க ஏராளமாகப் பணம் தேவை என்பதும் எனக்கு நன்றாகத் தெரி கிறது.

பணத்தை எப்படித் திரட்டுவது? தாராள உள்ளம் படைத்த பணக்காரர்களிடமிருந்து ஓரளவு பணத்தை ஈட்டலாம். குறிப்பிட்ட அளவுக்குமேல் வருமானமும் சொத்தும் உடையவர்கள் மீது கல்வி வரி என்பதாக ஒரு வரியை விதித்து அதன் மூலமாகவும் சிறிது பணம் சேர்க்கலாம். மிகப் பெரிய கட்டிடங்களில்தான் பள்ளிக்

கூடங்கள் இருக்கவேண்டும் என்கிற தப்பெண்ணத்தைவிட்டு விட்டு, ஓலை வேய்ந்த 'ஷெட்டு'களில் அவற்றை நடத்த முன்வரலாம். அப்படிச் செய்வதன் மூலமாகவும் சிறிது பணம் மிச்சப்படும்.

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம்—இவற்றின் பொது வருமானத்திலிருந்து இன்னமும் சற்று அதிகப்படியான தொகையைக் கல்விக்காக ஒதுக்கலாம்.

இவற்றையும், இவைபோன்ற ேவறு பல முறைகளையும் கையாளுவதன் மூலம், தேவையான அளவு பணத்தைத் திரட்டமுடியும். திரட்டவும் வேண்டும். திரட்டினுல்தான், கல்வி, சீரிய முறையில் அமையமுடியும்.

பொதுவாகக் கல்வி உலகத்தைப் பற்றியும், குறிப்பாக ஆரம்பக் கல்வியைப் பற்றியும், என் உள்ளத்தில் தோன்றிய சில கருத்துக்களை உங்கள் முன்னுல் நிறுத்தியிருக்கிறேன். இன்னமும் பல கருத்துக்கள் என் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருக்கின்றன. என்ருலும் நேரம் அதிகமாகிறது. எனவே என் தலைமை முன்னுரையை இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

சிந்தியுங்கள்—சிறந்ததோர் முடிவுக்கு வாருங்கள்—வந்த முடிவைச் செயல் உருவில் நிறைவேற்றுங்கள். என் உதவி, எப்போதும் உங்களுக்கு உண்டு.

அனைவருக்கும் வணக்கம்

சென்னை மாநில
எயிடட் ஆரம்பப்பள்ளி ஆசிரிய மானேஜர்கள்,
மானேஜர்கள் மாநாடு.

27–3–55–ல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானங்கள்

★

1. ரூ. 100-க்குக் குறைந்த வருமானமுள்ள பெற்றோர்களின் ஏழை மாணவர்களுக்கு, எலிமெண்டரி பாடசாலைகளில் 8–வது வகுப்பு வரையிலும்; செகண்டரி பாடசாலைகளில் 3–வது படிவம் வரையிலும், இலவசமாகப் படிக்க ஏற்பாடு செய்த அரசாங்கத்திற்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது.

2. 1-4-55 முதல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு, வேலையிலிருந்து விலகும்போது கடைசியாக வாங்கும் சம்பளத்தில் நான்கில் ஒரு பங்கு பென்ஷனுக்க் (Pension) கொடுக்க ஏற்பாடு செய்த அரசாங்கத்தாருக்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது.

3. சம்பளத்தில் கால்பாகம் பென்ஷன் கொடுப்பதை, அரை பாகமாக உயர்த்தவேண்டும் என்றும், அல்லது வருடத்திற்கு ஒரு மாத சம்பள வீதம் கிராஜியுடி (Gratuity)யாக எத்தனை வருடம் ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்களோ அத்தனை மாத சம்பளங்களை மொத்தமாகச் சேர்த்துக் கொடுக்கும்படி இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. (a) உடனடியாகக் கீழ்க்கண்டவாறு ஆசிரியர் சம்பளங்களை உயர்த்தும்படி அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

	Trained	Untrained
Secondary grade	Rs. 70/-	Rs. 50/-
Higher grade	Rs. 50/-	Rs. 35/-
Lower grade	Rs. 30/-	—
Prevocational Instructor	Rs. 50/-	Rs. 35/-
Needle work Instructor	Rs. 50/-	Rs. 35/-
Music Instructor	Rs. 50/-	Rs. 35/-

(b) ஒரேவகைத் தகுதியுடையவர்களுக்கு அவர்கள் பணியாற்றும் நிர்வாகம் எதுவாயினும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஒரே விதமாக இருக்க வேண்டும்.

5. (a) 12—13 வயதுடைய இளஞ்சிறுவர்களுக்கு E.S.L.C. பரீட்சை வைக்கும் கொடுமையான முறை உடனே ரத்து செய்யப்

படவேண்டும். அல்லது இன்னும் இரண்டொரு வருஷம் இப் பரீட்சை நீடிக்க வேண்டுமென்று அரசியலார் கருதினால், ஆரம்பப் பள்ளி 8-வது வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், செகண்டரி பள்ளிகளில் படிக்கும் 3-வது படிவ மாணவர்களுக்கும் சேர்ந்தாற் போல் ஒரே பரீட்சை நடத்த அடுத்த ஆண்டிலிருந்தே (1956) ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. (b) சேர்க்கை (Admissons) அடுத்த ஆண்டிலிருந்து 8-வது வகுப்பு, மூன்றாவது படிவம் (III Form) வரையில் இலவசக் கல்வி அமுலாவதால், அதிகமாக மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளை (High Schools)யே நாடுவர். ஆகையால், உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்கள் குறையாமலிருக்க 1956–ஆம் ஆண்டிலிருந்தே மூன்றாம் படிவத்திற்கும் எட்டாம் வகுப்பிற்கும் பொது பாடத் திட்டத்தின் கீழ்ப் பொதுத் தேர்வு (Common Examination) நடத்தவேண்டும்.

(c) இ. எஸ். எல். ஸி. பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், (Setters) விடைத் தாள்களைத் திருத்தல் (Examiners) போன்ற பதவிகளை 6, 7, 8 வகுப்புகளில் முறையே ஐந்து வருட அனுபவமுள்ள செகண்டிரி கிரேட் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

(d) இ. எஸ். எல். ஸி பொதுத் தேர்வில் தவறிய மாணவர்களுக்கு, எஸ். எஸ். எல். ஸி. பொதுத் தேர்வில் தவறிய மாணவர்களுக்குக் கொடுப்பது போல தவறிய பாடங்கள் உள்ளிட்ட எல்லாப் பாடங்களின் 'மார்க்கு'களையும் குறித்து பதிவுப் புத்தகம் கொடுக்க வேண்டும்.

6. இனி நமது சென்னை மாநிலத்தில் மூன்று விதமான கல்வி ஸ்தாபனங்களே கீழ்க்கண்டவாறு அமைக்கப்படவேண்டும்:

(1) ஆரம்பப்பள்ளிகள்—1 முதல் 8 வகுப்பு வரையில்.

(2) உயர்தரப் பள்ளிகள் (High Schools) 4, 5, 6, 7 படிவங்கள் வரையில்.

(3) 3 வருடங்கள் B. A. பட்டம் பெற கல்லூரிகள்.

7. நமது சுதந்தர ஆட்சியில், ஆட்சிப் பீடத்தில் அடிக்கடி பல கட்சிகளின் ஆட்சி மாறிமாறி வருவதால், ஆட்சிப் பீடத்தில் அமரும் கட்சிகள் அடிக்கடி கல்வித் துறையில் தலையிட்டுத்தங்கள் கட்சிக் கொள்கைகளை வற்புறுத்தி மாறுதல் செய்யாமல், கல்வி நாட்டில் நிரந்தரமாக ஒழுங்காக முன்னேற்றமடைய, ஆரம்ப ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள், கல்வி நிபுணர்கள்

கொண்ட, மேனாடுகளில் இருப்பது போல நிரந்தரமான கல்விச் சபைகளை ஜில்லாவாரி ஆரம்பக்கல்வி சட்டத்தின் கீழ் அமைக்கும்படி அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

8. தற்போது நமது இராஜ்ஜியத்திலுள்ள சுமார் 21,000 ஆரம்பப் பாடசாலைகளில் 11,000 ஆரம்பப் பாடசாலைகள், ஆசிரிய மானேஜர்களாலும், மானேஜர்களாலும் நடத்தப்படுகின்றன. அப்படியிருந்தும் தற்போது அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஆரம்பக் கல்வி கமிட்டியில் ஒரு ஆசிரிய மானேஜரையோ, மானேஜரையோ, ஆரம்பாசிரியரையோ சேர்க்கப்படாதது மிகவும் வருந்தத் தக்கது.

ஆதலால் உடனடியாக குறைந்தது, அனுபவமுள்ள இரண்டு ஆரம்பாசிரியர்களையும், இரண்டு ஆசிரிய மானேஜர்களையும், இரண்டு மானேஜர்களையும் ஆரம்பக்கல்வி கமிட்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

9. ஆரம்பப் பள்ளிகளில் தற்போது 6—ஆம் வகுப்பில் ஆரம்பிக்கப்படும் ஆங்கிலக் கல்வி, 4—வது வகுப்பிலிருந்தே தொடங்க உத்தரவிடும்படி அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

10. தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் முழு நம்பிக்கை ஆரம்பப் பள்ளிகளை, ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவதுதான் என்று இருந்தபோதிலும், இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பலவித அபிப்பிராயங்களும் நடைமுறையில் நடத்த சில சிக்கல்களும் இருந்து வருவதால், ஆதாரக்கல்வித் திட்டத்தைக் குறிப்பிட்ட ஒரு ஜில்லாவில் அமுலுக்குக் கொண்டுவந்து பரீட்சை பார்ப்பதோடு வைத்துக் கொண்டு, மற்ற ஜில்லாக்களில் ஆயிரக் கணக்கான ஆரம்பப் பாடசாலைகளை நிறுவுவதில் முழுகவனத்தைச் செலுத்தும்படி அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

11. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அதிகமாகக் கிடைக்காத காரணத்தால், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 62—வயது வரையில் வேலை செய்யலாம் என்று உள்ள தற்காலிக உத்தரவை நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

12. பிரதி வருடம் டிசம்பர் மாதத்தில் 75 சதவீதம் எயிடட் பள்ளிகளுக்கு ஆசிரியர் கிராண்டு கொடுப்பதைப்போலவே, ஜனவரி மாதத்திலும் 75 சதவீதம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

13. N. G. O., அரிஜன், ஏழைப் பெண்கள் போன்றவர்க்குத் தரப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையை மூன்று மாதத்திற்கு ஒரு

தடவை கொடுக்கும் முறையை மாற்றி மாதாமாதம் கொடுக்கும்படி உத்தரவிட கேட்டுக்கொள்கிறது.

14. சுமார் 11,000 எயிடட் பாடசாலைகளில், சில பாடசாலைகளில்தான் சம்பளம் வசூலிக்கப்படுகின்றன. ஏனைய பாடசாலைகளில் சம்பளமே வசூலிக்காத காரணத்தால், அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்வாக கிராண்டு (Maintenance Grant) 15 சத விகிதத்திற்குக் குறையாமல் கொடுக்கும்படி கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

15. சுதந்தரம் வளர்ந்து வரும் இக்காலத்தில் நாளுக்கு நாள் பாடசாலை நிர்வாகிகளின் சுதந்தரம் பறிக்கப்பட்டு, கல்வி அதிகாரிகளுக்கும், மானேஜர்களுக்கும் இருக்கவேண்டிய நல்லுறவு கீழ்க் கண்ட உத்தரவுகளால் குறைந்து கொண்டு வருகிறது. அதன் காரணமாக ஆசிரியர்களை ஊக்குவித்து பாடசாலைகளைத் திறமையாக நடத்தி வைக்க முடியாமல், எயிடட் பாடசாலைகளின் நல்லபெயரும், நன்மதிப்பும், கல்வித் திறனும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆதலால் கீழ்க்கண்ட உத்தரவுகளை அரசாங்கத்தார் உடனடியாக எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

(1) பாடசாலைகளில் ஆசிரியர்களை அமைப்பதிலும், ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்ளும் ஆசிரியர்களை நீக்குவதிலும் உள்ள மானேஜர்களின் பொறுப்பைப் பாதிக்கும் D. P. I. உத்தரவு R. O. C. No. 2225—B—7—51—52 Dated 17-6-53.

(2) மானேஜர்கள் பிரதிமாதம் 3–ஆம் தேதிக்குள் மாதாந்திரக் கணக்கை அனுப்பாவிட்டால் ரூபாய் ஒன்று அபராதம் (Fine) போடுவதாகச் சொல்லப்படும் உத்தரவு.

16. பல்வேறு மதத்தைச் சார்ந்த மாணவர்கள் பள்ளிகளில் படிப்பதால் குறிப்பிட்ட மதக்கொள்கைகளைப் போதிப்பதை விட்டு, ஒழுக்கக் கோட்பாட்டுக் கல்வியை (Moral Instruction) அளிக்கும்படி அரசியலாரை இம்மாநாடு கோட்டுக் கொள்கிறது.

17. அரசாங்கம் ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவதில் கொண்டுள்ள ஆர்வமும் வேகமும், அப்படி மாற்றப் பட்ட ஆதாரக் கல்வி நிலையங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதில் காட்டுவதில்லை. இந்நிலை மாற வேண்டும்.

18. கீழக்கண்ட அங்கத்தினர்கள் கொண்ட தூதுக் குழு ஒன்று, பிரதம மந்திரி, கல்வி மந்திரி, டைரக்டர், அவர்களை சந்தித்து மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கி, ஆசிரியர் களுக்கும், மானேஜர்களுக்கும் ஏற்பட்டுள்ள குறைகளை நீக்க வேண்டுமென்று மாநாட்டு நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறது.

1. திரு. P. வீரராகவன் 2. திரு. A. K. S. சர்மா, 3. திரு. A. R. சேஷாசலம் 4. திரு. N. A. நடேச முதலியார் 5. W. T. மாசிலாமணி முதலியார் (வாலாஜாபாத்) 6. திரு. I. D. ஆசீர்வாதம், (மதுரை) 7. திரு. S. V. ஐய்யர் (காட்டுப்பாக்கம்) 8. திரு. S. A. சிவசங்கர் (திருச்சி) 9. திருமதி இந்திராணி செங்கல்வராயன் (சென்னை.)

சென்னை மாநில எய்டெட் பள்ளி

ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்களின் சங்கம்.

94/95 புதுத்தெரு, மண்ணடி சென்னை—1.

27—3—55—ல் நடைபெற்ற மாநில மாநாட்டில் கீழ்க்கண்ட அங்கத்தினர்கள், நம் மாநில சங்கத்திற்கு மாவட்ட வாரியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள் :

சென்னை

1. திரு. P. வீரராகவன், மானேஜர் : ஜி. ஆர். சி. ஆரம்பப் பாடசாலை, புதுத் தெரு, சென்னை—1.

2. திரு A. K. S. சர்மா, ராமகிருஷ்ண உயர்தர ஆரம்ப பாடசாலை, ஆச்சாரப்பன் தெரு சென்னை—1.

3. திரு. A. R. சேஷாசலம், என். ஏ. பி. உயர்தர ஆரம்பப் பாடசாலை, ஏழுகிணறு சென்னை—1.

4. திரு. N. A. நடேச முதலியார், சண்முகானந்த பாடசாலை, மைலாப்பூர் சென்னை—4.

5. திரு. T. V. சுந்தரம், ராமகிருஷ்ண பாடசாலை, ராயபுரம், சென்னை-13.

6. N. A. ரங்கசார்லூ 12—A., பட்டேல் ரோடு, பெரம்பூர், சென்னை.

செங்கற்பட்டு

1. திரு. S. A. அய்யர், எய்டெட் பள்ளி, மங்களாபுரி, காட்டுப்பாக்கம்.

2. திரு. W. T. மாசிலாமணி முதலியார் இந்துமத பாடசாலை வாலாஜாபாத்.

வட ஆற்காடு

1. திரு. S. புண்ணியகோட்டி முதலியார், நேஷனல் உயரதர ஆரம்பப் பள்ளி, வேலூர்.

2. திரு. Y. முத்துகிருஷ்ணய்யா, சர்க்கார் மண்டி பாடசாலை, வேலூர்.

தென் ஆற்காடு

1 திரு. N. அச்சுதன், மேல்பேட்டை, காரம் p. o. திண்டிவனம்.

2. திரு. P. இலட்சுமணசாமி, காந்திபாடசாலை, விழுப்புரம்.

தஞ்சை

1. திருமதி P. இராஜாமணி அம்மாள், வேலிப்பாளையம், நாகை.

2. திரு. N. S. நாராயணசாமி, மருத்துறை, குடந்தை.

திருச்சி

1. திரு. S. A. சிவசங்கர், அருணாசலம் நினைவு உயர்தர துவக்கப்பள்ளி, சன்னாசி நல்லூர்.

2. C. நடேச உடையார், கொத்த மங்கலம், சிறுமயங்குடி அஞ்சல், லால்குடி வட்டம்.

மதுரை

1. திரு. S. பழனியப்பன், ஜெயபாரதி ஆரம்ப பாடசாலை அகிம்சாபுரம், சேத்தூர் மதுரை.

2. திரு. J. D. ஆசிர்வாதம், என். எம். சி. சி. உயர்தர ஆரம்பப்பள்ளி, புது ஜெயில் ரோடு, மதுரை.

இராமநாதபுரம்

1. திரு. K. O. S. V. பிரகாசம், பால குருகுலவித்தியாலயம், விருதுநகர்.

2. திரு. R. K. நாகலிங்கம் பிள்ளை, வைசிய மஞ்சப்புதூர் எலிமென்டரி பள்ளி, பரமக்குடி.

திருநெல்வேலி

1. திரு. A. பாக்கியநாதன், இந்து உயர்தர ஆரம்பப்பாடசாலை, மேற்கு ஆழ்வார் தோப்பு, ஸ்ரீ பராங்குச நல்லூர் P. o.

2. திரு. P. D. ஞானராஜ், காந்தி கல்வி நிலையம், திருப்பணி செட்டி குளம், (via) சாயர் புரம்.

சேலம்

திரு. S. K. ராம அய்யர், சீதாராம வித்தியாலயம், சேந்தமங்கலம் அஞ்சல்.

2. திரு. C. உலகளந்தார், கார்னேஷன் ஆரம்பப்பாடசாலை, ஆத்தூர், அஞ்சல்.

நீலகிரி

திரு. I. J. ஹாலய்யா, லிங்காயத் உயர்தர ஆரம்பப்பாடசாலை, காட்டேரி.

2. நிர்வாகி M. M. பள்ளி, தூனேரி, உதகமண்டலம்.

கோவை

திரு. A. பசுபதியப்பா, உயர்தர ஆரம்பப்பாடசாலை, காரமடை.

2. திரு. T. S. சீனுவாசன், ஆசிரிய மானேஜர், திருப்பூர்.

தென்கன்னடம்

Sri. S. K. Samanth, Manager, R. K. P. S. Higher Ely. School. Cherkadi, P. o.

2. Sri. Jaganath Naik, Manager, Modern Higher. Ely, School, Udipi.

MALABAR

1. Sri. A. M. Narayanan, Ariyalur P. o.
   (via) Parapanangadi. S. Malabar.
2. Sri. A. V. Kuttikrishna menon,
   Swaminatha, Vidyalaya, Anakkara S. Malabar.

சங்கத்து நிர்வாகிகள்

தலைவர் : திரு. P. வீரராகவன்.

துணைத்தலைவர் : திரு A. K. S. சர்மா.

பொதுக் காரியதரிசி } A. R. சேஷாசலம்.
பொருளாளர் }

உதவிக் காரியதரிசி : N. A. நடேச முதலியார்.

அடுத்த மாநில மாநாடு 1956-ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில் கூடும்.

P. வீரராகவன்	A. R. சேஷாசலம்
(ஆசிரியர், "ஆரம்பக் கல்வி")	பொதுக் காரியதரிசி
தலைவர்.	பொருளாளர்.

முக்கிய அறிவிப்பு

"ஆரம்பக் கல்வி பத்திரிகை" இனும்

சென்ற 1954–55 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்கி, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும், எமது **புதுமுறை சங்க வாசகங்களை** ஒன்று முதல் ஐந்தாவது வகுப்புவரை **வீரபாண்டியன் வாசகங்கள்** 1 முதல் 8–வது வகுப்பு வரையில் பாட புத்தகங்களாக வைத்தும், சிலர் எமது இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1955–56 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்துவைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1955–56–க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, நமது அலுவலகத்திற்கு மே 31–ம் தேதிக்குள் ஒரு கார்டு மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலைகளின் பெயர்கள் 1955–56 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம்போல் நமது ஆரம்பக் கல்வி பத்திரிகையை இனமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக் கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1955 ஜூன் மாதம் 30–ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு Billகள் அனுப்பத் தேவையில்லை. ஆர்டர்களைக்கொண்டே பெயர்களை ரிஜிஸ்டர் செய்யப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்க வேண்டியவை :

முன்பு தபால் கட்டணம் 5 தோலாவுக்கு அரையணாவாகயிருந்தது. தற்போது ஓரணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சுமார் 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது

புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்பட வேண்டுமானால் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. அதாவது 20 ரூபாய்க்குக்கொடுக்கப்படும் 20% கமிஷன் ரூபாய் 4-க்குமேல் தபாற் செலவாகிறது. ஆதலால் புத்தகங்களை ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. இரயில்வே செலவு 20 ரூபாய் பெறுமான புத்தகத்துக்கு 1 ரூபாய்க்கு மேல் ஆகாது.

ஆதலால் நேரிடையாகச் சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறக்காமல் அருகிலுள்ள இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிக்குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால்மூலம்தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களிலேயே அவ்விதம் குறிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில்இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்துச் சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கும் 20% கமிஷன் கொடுக்கின்றோம். அவர்கள் செலவும், இலாபமும் போகக் குறைந்தது ரூபாய்க்கு 1 அணு ($6\frac{1}{4}$%) கமிஷன் கொடுக்கும்படியாவது கேட்டு வாங்கலாம். 20% கமிஷன் வேண்டுமென்று விரும்புபவர்கள் சென்னை அலுவலகத்திற்கே ஆர்டர்கள் அனுப்பி இரயில்வே நிலையத்தின் (Railway Station) பெயரையும் தவறாமல் குறித்தனுப்பவும். செலவு 5% போக 15% ஆசிரியர்களுக்கு அவசியம் இலாபம் கிடைக்கும்.

நமது பத்திரிகையில், நமது புத்தகங்களை வாங்கி விற்கும் வியாபாரிகளின் பெயர்களை ஜில்லா வாரியாகப் பிரசுரித்திருக்கின்றோம். அவர்கள் மூலம் புத்தகங்களை வாங்கிக்கொள்ளலாம்; தக்க கமிஷன் கொடுப்பார்கள். இன்னும் எங்கள் புத்தகங்கள் அகப்படாத இடங்களில் ஆங்காங்குள்ள வியாபாரிகளை நமது புத்தகங்களை வரவழைத்து விற்கும்படி ஏற்பாடு செய்துக் கொள்ளவும்.

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் கவனிக்க வேண்டியவை

நமது அலவலகத்தில் ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் ஆரம்பப்பாடசாலைகளுக்குத் தேவையான எல்லாப்பாட புத்தகங்களும் பிரசுரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைகளுக்கு 25 புத்தகங்களும், உயர்தரப் பாடசாலைகளுக்கு 11 புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பாட புத்தகங்களை மாற்றலாமென அரசாங்க உத்தரவில் கண்டிருக்கிறது. ஆதலால் சில பாடசாலைகளில் சிற்சில புத்தகங்களையே மாற்ற வசதியிருக்கும். சில ஆரம்பப் பாடசாலைகளில் எல்லாப் புத்தகங்களையும் மாற்றவசதியாயிருக்கும். அப்பாடசாலைகளுக்கு 25 மாதிரிப் புத்தகங்களை அனுப்புவதென்றால் தபாற்கட்டணம் அதிகமாகின்றது. அப்படி முழு செட்டையும் தபால்மூலம் அனுப்ப எண்ணுபவர்கள் ரூபாய் 7 மணியார்டர் (M. O.) அனுப்பவும். இரயில்வே நிலையம் அருகே உள்ளவர்கள் ரூபாய் 6 அனுப்பினால் முழுசெட் இரயில்வே Paid பார்சல் மூலம் அனுப்பப்படும்.

6 முதல் 8 வகுப்பு வரையில் 11 புத்தகங்கள் தபால் மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 7–ம் இரயில்வே பார்சல்மூலம் பெற விரும்புகிறவர்கள் ரூ. 6–ம் M. O. அனுப்பவும்.

குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் வேண்டுபவர்கள் ஆரம்பக் கல்விப் பத்திரிகையில் வெளியிட்ட அளவு தபால் பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தபால் மூலம் அனுப்பப்படும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்குமேல் எக்காரணத்தைக்கொண்டும் மறுமுறை அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் பணம் அனுப்பப்பட்டால் தபாற் செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையைத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

எமது புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

சென்னை

1. M. துரைசாமி முதலியார் & கோ.
புக் செல்லர்
1-1, மலையப்பன் தெரு
சென்னை—1.

2. C. குமாரசாமி நாயுடு & சன்ஸ்
புக் செல்லர்
சைனாபஜார்
சென்னை—1.

3. P. K. Naidu
புக் செல்லர்
1, பத்ரையப்பன் தெரு
சென்னை—1.

4. பாலகுமார் & கோ
புக் செல்லர்
சைனாபஜார்

5. தாமோதரம் & கோ
புக் செல்லர்
சைனாபஜார்
சென்னை—1.

6. R. அய்யாவு செட்டியார்
புக் செல்லர்
சிந்தாதரிப்பேட்டை
சென்னை—2.

7. ராஜன் வித்யா எம்போரியம்
புக் செல்வர்
வேப்பேரி, சென்னை—7.

8. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
78, பெரம்பூர் பாரக்ஸ்
வேப்பேரி, சென்னை—7.

9. திருமலை ஸ்டோர்
புக் செல்லர் & ஜெனரல் மர்ச்சண்ட்
தி. நகர், சென்னை—17.

10. P. T. சாமி & கோ
புக் செல்லர்
நுங்கம்பாக்கம்
சென்னை—6.

11. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
நுங்கம்பாக்கம், சென்னை—6.

செங்கல்பட்டு

1. லட்சுமணசிங்
புக் செல்லர்
குன்னத்தூர்
வயா—பூந்தமல்லி

2. மோகன் புக் டிப்போ
காஞ்சீபுரம்

3. P. T. மாசிலாமணி முதலியார்
புக் செல்லர்
காஞ்சீபுரம்

4. T. K. முனிரத்தினம்
புக் செல்லர்
திருக்கழுக்குன்றம்

5. M. D. அய்யாசாமி
புக் செல்லர்
கருங்குழி.

வடஆற்காடு

1. A. M. ஜெயராமன்
புக் செல்லர்
திருப்பத்தூர்

2. ஸ்டேஷனரி மார்ட்
புக் செல்லர்
குடியாத்தம்

3. K. M. சாமி & சன்ஸ்
புக் செல்லர்
ஆற்காடு

4. K. V. பிரஸ் புக் டிப்போ
வேலூர்

5. K. M. பாச்சா
புக் செல்லர்
வந்தவாசி

6. எவர் கிரீன் புக் ஷாப்
குடியாத்தம்

7. S. K. வெங்கட்ட கிருஷ்ண
& கோ
புக் செல்லர்
திருப்பத்தூர்

8. V. D. ரத்தன முதலியார்
புக் செல்லர்
குடியாத்தம்

9. A. M. முனிரத்தின
முதலியார்
புக் செல்லர்
ஆம்பூர்

10. K. J. R. சாமி
புக் செல்லர்
போளூர்

11. A. பாக்கிய முதலியார்
புக் செல்லர்
வேலூர்

12. குருகுல கிருஷ்ண
ஸ்டோர்
41, லாங் பஜார்
வேலூர்.

13. V. ராமசாமி
புக் செல்லர்
ஆம்பூர்.

14. கிருஷ்ண ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
வாணியம்பாடி.

15. தேவி லுங்கி கம்பெனி
புக் செல்லர்
சம்பத்ராஜம்பேட்டை

16. ஸ்ரீ லட்சுமி புக் டிபோ
ஆரணி.

17. T. V. C. ஷண்முகம்
புக் செல்லர்
திருவண்ணமலை

18. N. K. பாணி & பிரதர்ஸ்
வேலூர்,
புக்செல்லர்

19. B. ராமகண்ணு செட்டி
& சன்ஸ்
புக் செல்லர்ஸ்
திருவத்திபுரம்

20. கோதண்ட செட்டி
புக் செல்லர்
ஆரணி

21. மாதா ஸ்டோர்ஸ்
கஸ்தூரி மார்க்கட்
ஆற்காடு

23. V. M. ராஜமாணிக்கம்
புக் செல்லர்
திருப்பத்தூர்

24. P. தங்கவேல் பிள்ளை
புக் செல்லர்
திருவண்ணமலை

25. A. G. முகமது சியக்துல்லா
ஊல்வி

புக் செல்லர்
பஜார் ஆம்பூர்

26. K. M. கேசவ சேர்வை
மர்ச்சண்ட்
மேலாலங் குப்பம்
குடியாத்தம் P.O.

27. P. C. M. வெங்கட்டராம
செட்டி
ஜெனரல் மரச்சண்ட்
போளுர்

28. T. V. C. கண்ணன்
புக்டிப்போ
மண்டபம்
திருவண்ணமலே

29. P. S. சரவணமுதலியார்
புக் செல்லர்
ராணிப்பேட்டை

30. T. V. C. முனிரத்தின
செட்டியர்ர்
புக் செல்லர்
திருவண்ணமலே

தென் ஆற்காடு

1. A. G. ராஜன் ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
பண்ருட்டி

2. K. V. ராஜா செட்டியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
வெல்லய்யன்குப்பம்.

3. V. B. கணேசன்
புக் செல்லர்
விழுப்புரம்

4. T. R. சுந்தரமூர்த்தி
செட்டியார்
மளிகை & புக்ஷாப்
சங்கராபுரம்

5. கமலா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
பஜார் தெரு
விழுப்புரம்

6. S. V. சாரங்கபாணி
ஜெனரல் மர்ச்சண்ட்
விருத்தாசலம்

7. V. K. M. அருணசல
செட்டியார் & கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாப்புலியூர்

8. C. C. ராமாநுஜ செட்டியார்
& சன்ஸ்
புக் செல்லர்
சிதம்பரம்.

9. P. முனுசாமி நாயுடு
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்

10. V. கன்னையா
செட்டியார்
புக் செல்லர்
கல்லக்குறிச்சி

11. S. R. வெங்கடராம
செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
விருதாசலம்

12. P. S. ராஜன் & கோ.
புக் செல்லர்
பண்ருட்டி

13. அம்பிகா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆனந்தபுரம்

14. G. சம்பந்த முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
திண்டிவனம்.

15. R. ஜெயராம் நாயுடு
மளிகை
ஆண்டிமடம்

16. குமரன் டிரேடிங் அவுஸ்
46, லாரன்ஸ் ரோடு
திருப்பாப்புலியூர்

17. S. கோவிந்தசாமி செட்டி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிபாடி

18. R. தக்ஷிணாமூர்த்தி
ஜெனரல் மர்ச்சண்ட்
குறிஞ்சிபாடி

19. C. N. R. செந்தி
விநாயகம் செட்டியார்
இரும்பு வியாபாரம்
வளவனூர்

20. கேசவலு செட்டியார்
புக் செல்லர்
திண்டிவனம்

21. T. ராஜகோபாலன்
புக் செல்லர்
கிருஷ்ணபுரம்
செஞ்சி–P. O.

22. G. பார்த்தசாரதி
அய்யங்கார்
புக் செல்லர்
19, மேற்கு சந்நதி
சிதம்பரம்

23. பாரதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ஆநந்தபுரம்.

24. K. S. அப்துல் ஜப்பார்
ராவுத்தர்
புக் செல்லர்
மேல் சித்தாமூர் P. O.
திண்டிவனம் Tk.,

25. N. கண்ணப்ப முதலியார்
புக் செல்லர்
சத்தம்பாடி P. O.
செஞ்சி Tk.

26. C. P. S. புக் ஷாப்
சிதம்பரம்.

27. R. அர்க்காலி
ஜெனரல் மர்ச்சண்ட்
செஞ்சி

தஞ்சை

1. மனோன்மணி விலாஸ்
புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

2. இராமலிங்கா புக் டிபோ
விஜயபுரம்
திருவாரூர் Tk.

3. K. கோவிந்தசாமி பிள்ளை
& பிரதர்ஸ்
மளிகை
பந்தணை நல்லூர்
வயா, குத்தாலம்

4. R. ஸ்ரீனிவாச நாயுடு
புக்செல்லர்
மாயூரம்

5. சன்மார்க்க கலா நிலையம்
வள்ளுவர் இல்லம்
ஆக்கூர்

6. P. V. நாதன் & கோ
புக் செல்லர்
கும்பகோணம்

7. பிரகாஷ் டிரேடர்ஸ்
புக் செல்லர்
கும்பகோணம்

8. M. கணபதி
புக் செல்லர்
காசிக்கடை தெரு
திருத்துறைப் பூண்டி

9. ஸ்ரீ நாராயணா புக் ஸ்டால்
காந்தி ரோட்
மன்னார்குடி

10. R. ராமானுஜம் நாயுடு
புக் செல்லர்
மாயூரம்

11. திரு. வள்ளாலர் புக் டிப்போ
த. பழூர்.

12. பாரதமாதா புக் டிப்போ
93 எல்லையம்மன்
கோவில் தெரு
தஞ்சை

13. குமரன் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
மாயூரம்

14. விஸ்வநாத செட்டியார்
ஷாப் மர்ச்சண்ட்
நாகூர் தஞ்சை

திருச்சி

1. முத்து புக் டிப்போ
மைலம் சந்தை
திருச்சி

2. T.A. பச்சையப்ப முதலியார்
புக் செல்லர்
பொன் பரப்பி
Ponparappi

3. T. பெரியசாமி பிள்ளை
ஜெனரல் மர்ச்சண்ட்
பெரம்பலூர்

4. பழனியப்ப பிரதர்ஸ்
புக் செல்லர்
தெப்பக்குளம்
திருச்சி

5. S. B. பாலநாகய்ய செட்டியார்
புக் ஷாப்
கரூர்

6. C. M. நடேசன்
புக் செல்லர்
அரியலூர்

7. பழனி ஆண்டவன்
புக் டிபோ
தெப்பக்குளம்
திருச்சி

8. R. சின்னப்பன்
News paper Merchant
அரியலூர்

9. சென்னப்ப ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
தாத்தய்யங்கார் பேட்டை

10. நாதன் விலாஸ்
புக் டிப்போ
கீழ் பழுவூர்
வயா அரியலூர்

11. V. ஜெகதீசன்
புக் செல்லர்
பட்டுக் கோட்டை

12. சரஸ்வதி ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
கோனப்பட்டி

13. B. கோவிந்தராவ்
புக் செல்லர்
துறையூர்

மதுரை

1. ராமசாமி
புக் செல்லர்
பழனி

2. V. ராமசாமி செட்டியார்
புக் செல்லர்
லண்டக் கோட்டை

3. ஸ்ரீ மீனாட்சி & கோ
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

4. H. M. முகமது மொகிதீன்
ஷாப்
ஊசியலம்பட்டி

5. S. முத்துசாமி
புக் செல்லர்
போடிநாயகனூர்

6. M. நடன சுந்தரம்
பிரதர்ஸ்
புக் செல்லர்
புது மண்டபம்
மதுரை

7. K. கிருஷ்ணமாச்சாரி
ஷாப்மார்ச்சண்ட்
நிலக் கோட்டை

8. P. K. A. குழந்தை வேலு
நாடார்
புக் செல்லர்
திண்டுக்கல்

9. S. V. S. சிவராம லிங்க
நாடார்
புக்ஷாப்
திருமங்கலம்

10. M. தக்ஷிணாமூர்த்தி
& கோ
புக் செல்லர்
புதுமண்டபம்
மதுரை

11. P. L. அருணாசல முதலி
யார் அண்டு சன்ஸ்
எஜுகேஷனல்
பப்ளிஷர்
புது மண்டபம்
மதுரை

12. கணேசன் ஸ்டோர்ஸ்
காந்தி ரோடு
பழனி

13. K. V. அரபாஷா ராவுதர்
அண்டு சன்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
ஒட்டன் சத்திரம்

14. V. ஆறுமுகம் பிள்ளை
ஷாப் மார்ச்சண்ட்
பெரியகுளம்

15. S. K. காளி முத்து
செட்டியார்
ஷாப் மார்ச்சண்ட்
போடிநாயகனூர்

16. K. P. R. சாரங்கபாணி
செட்டியார்
ஷாப் அண்டு ஜனரல்
மார்ச்சண்ட்
பழனி

K. V. நாராயண அய்யர் சன்ஸ்
புக்செல்லர்
மெயின்ரோட்
திண்டுக்கல்

18. அமீதியா ஸ்டோர்ஸ்
ஷாப் மர்ச்சண்ட்
பேரையூர்

19. S. M. சோமய்யா
ஷாப்
சின்னக் கடை வீதி
திருமங்கலம்

20. ஜெனரல் ஸ்டோர்ஸ்
30. பெரிய கடை வீதி
பழனி

21. T. S. குருசாமி நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
கள்ளிகுடி

22. V. முத்து தேவர்
தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
சில்வார் பட்டி

23. K. சிவசுப்பிரமணி
ஷாப் மர்ச்சண்ட்
போடி நாயகனூர்

24. S. P. சூரியநாராயண
பிள்ளை
புக் ஷாப்
மெயின்ரோட்
திண்டுக்கல்

25. S. P. M. தங்கமணி
& பிரதர்ஸ்
ஷாப்
கள்ளி குடி

26. அருணா ஸ்டோர்ஸ்
ஜெனரல் மர்ச்சண்ட்
ஊசிலம்பட்டி

27. S. S. இராஜன்
புக்செல்லர்
புதுமண்டபம்
மதுரை

ராமநாதபுரம

1. T. அமிர்தம்
ஷாப்
கல்லூரணி

2. A. V. வேல் முருக நாடார்
புக் ஷாப்
கள்ளிச் சேரி
துலுக்கப்பட்டி P.o.

3. K. S. பிள்ளை & சன்ஸ்
புக் செல்லர்
ராஜ பாளையம்

4. S. நடராஜ நாடார்
புக் ஷாப்
அருப்புக்கோட்டை

5. K. M. S. சோமசுந்தரம்
செட்டியார்
புக் ஷாப்
ராமநாதபுரம்

6. M. M. சின்னசாமி பிள்ளை
& சன்ஸ்
புக் செல்லர்
ஸ்ரீ வில்லிப்புத்தூர்

7. அருணா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
ராமநாதபுரம்

8. S. T. சாமி & சன்ஸ்
புக் ஷாப்
ராமநாதபுரம்

9. ஸ்ரீ மாரியம்மன்
ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
விருதுநகர்

10. V. பானுசாமி செட்டியார்
புக் ஷாப்
காரைக்குடி

11. T. முத்துசாமி நாடார்
மர்ச்சண்ட்
சிட்டி பஜார்
அருப்புக்கோட்டை

12. ராஜா ஸ்டோர்ஸ்
புக் செல்லர்ஸ்
ஸ்ரீ வில்லிப் புத்தூர்

13. M. M. S. ராமசாமி
செட்டியார்
புக் செல்லர்
பரமகுடி

14. M. S. கருப்பையய
நாடார்
புக் செல்லர்
சாத்தூர்

15. ஸ்ரீ கண்ணன் ஸ்டோர்
தியாகிகல் ரோட்
தேவக்கோட்டை

16. ராணி ஸ்டோர்ஸ்
வண்டிக்கார தெரு
ராமநாதபுரம்

17. C. முத்து
ஷாப் மர்ச்சண்ட்
இளையான் குடி

18. புஸ்தக பண்ணை
ஆர்ச்
தேவக்கோட்டை

19. A. R. முத்து பானு செட்டி
புக் செல்லர்
சாலையூர்
இளையான் குடி

20. S. G. ரோசரி
புக் செல்லர்
புதிய குடி
சாயல் குடி P.O.

21. கலா நிலையம்
புக் செல்லர்
கரைக்குடி

22. K. S. ஷாவுல் ஹமீத்
ஜெனரல் மர்ச்சண்ட்
முஸ்லிம் பஜார்
கீழக்கரை

23. O. R. A. ஷேக் தாவுத்
& கோ
புக் செல்லர்
அபிராமம்

24. C. M. M. முகமது
காஸிம்
ஜெனரல் மர்ச்சண்ட்
முதுகுளத்தூர்

25. M. S. அண்ணாமலை
நாடார்
ஜெனரல் மர்ச்சண்ட்
சாத்தூர்

26. S. நடராஜ நாடார்
ஷாப் மர்ச்சண்ட்
அருப்புக்கோட்டை

27. S. C. சங்கம ரெட்டியார்
மளிகை
மெயின் பஜார்
விருது நகர்

28. R. கருப்பய்யா
புக் செல்லர்
பெட்டி கடை
சாயல் குடி P.O.

திருநெல்வேலி

1. ஸ்ரீ கோபாலன் ஸ்டோர்
புக் செல்லர்
சங்கரன்கோயில்

2. U. R. பாபநாசம் பிள்ளை
புக் செல்லர்
வீரவநல்லூர்

3. டவுன் பிரஸ்
புக் செல்லர்
கோவில்பட்டி

4. K. S. முத்து
பாணீஸ் புக் டிப்போ
கள்ளி குளம்

5 M. ஷண்முகம் பிள்ளை
புக் செல்லர்
கோவில்பட்டி

6. ஸ்ரீ கோபாலன் அண்டு கோ
புக் செல்லர்
கோவில்பட்டி

7. A. S. C. சோனமுத்து
நாடார் அண்டு கோ
புக் செல்லர்
பெரியகடை வீதி
கோவில்பட்டி

8. ஸ்ரீ ஷண்பகவள்ளி
புக் ஷாப்
கோவில்பட்டி

9. ஸ்ரீ முருகன் ஜெனரல்
ஸ்டோர்ஸ்
தென்காசி

10. டயோசீஸன் புக் டிப்போ
பாளையங்கோட்டை

திருநெல்வேலி

11. J. A. செலஸ்டயின்
பெர்னன்டோ
புக் செல்லர்
வீரப்பாண்டியன் பட்டணம்

22. நேஷனல் ஸ்டோர்ஸ்
புக் செல்லர்
எருவாடி

சேலம்

1. சக்ரபாணி செட்டி
புக் செல்லர்
இராசிபுரம்

2. L. M. நாகமய்யா செட்டியார்
புக் செல்லர்
ஆத்தூர் சேலம்

3. A.K. சந்திரய்ய செட்டியார்
புக் செல்லர்
(Fort) சேலம்

4. பரமசிவம் பிள்ளை அண்டு
சன்ஸ்
புக் செல்லர்
செவ்வாப்பேட்டை

5. M. S .R. பொன்னுசாமி
முதலியார் அண்டு சன்ஸ்
மளிகை
பாப்பாரப்பட்டி

6. ஸ்ரீ சாய் ஜெனரல் ஸ்டோர்
புக் செல்லர்
1—வது அக்ரகாரம்
சேலம் டவுன்

7. D. A. மாணிக்க செட்டி
புக் செல்லர்
தர்மபுரி

8. ராக் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

9. மவுண்ட் அவுஸ்
புக் செல்லர்
நாமக்கல்

10. G. ராமசந்திர நாயுடு
ஸ்ரீராம விலாஸ் புக்ஷாப்
ஓமலூர்

11. D. A. நந்த கோபால்
புக் ஷாப்
தர்மபுரி

12. M. N. சுப்பிரமணிய முதலியார்
யார்ன் மர்ச்சண்ட் அண்
புக் செல்லர்
திருச்சங்கோடு.

கோயம்புத்தூர்

1. K. O. பேட்டை கவுடர்
புக் செல்லர்
கோயம்புத்தூர்

2. P. R. S. மணியம்
பல்லடம் ரோட்
திருப்பூர்

3. கவிஞர் பதிப்பகம்
241, ராஜா தெரு
கோயம்புத்தூர்

4. C. R. நடராஜன் அண் சன்
கிருஷ்ண விலாஸ் புக் டிப்போ
பெரிய கடை தெரு
கோயம்புத்தூர்

5. M. K. சுப்பிரமணியன்
ஷாப் அண்டு புக் மர்ச்சண்ட்
வால்பாரை

6. ஷண்முகாநந்த புக் டிப்போ
கோபிசெட்டி பாளையம்

7. S. S. பானுசாமி செட்டி
புக்ஸ் அண்டு ஸ்டேஷனரி
மர்ச்சண்ட்
சத்தியமங்கலம்

8. தண்டபாணி ஸ்டோர்ஸ்
ஷாப் அண்டு புக் செல்லர்
தாராபுரம்

9. K. V. N. கவுண்டர்
அண்டு கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
பெருந்துறை

10. N. பழனிசாமி கவுண்டர்
அண்டு கோ
புக்செல்லர்ஸ் அண் ஸ்டேஷனரி
14/16 பல்லடம் ரோடு
திருப்பூர்

11. U. S. நாகமாணிக்கம் செட்டியார்
புக் செல்லர் அண்டு ஜெனரல்
மர்ச்சண்ட்
டாலி ரோடு
உடுமலைப்பேட்டை

12. A. L M. பொன்னுசாமி
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
அந்தியூர்

13. பாலதண்டாயுதம்
செட்டியார்
புக் செல்லர்
32, பஜார் தெரு
பொள்ளாச்சி

14. ஜெயம் அண்டு கோ
புக் செல்லர்
ஈரோடு

15. டைமன் ஜூபிலி
புக்ஸ் & ஸ்டேஷனரி டிப்போ
கோபிச்செட்டிபாளையம்

16. ராஜா புக் ஷாப்
டாலி ரோட்
உடுமலைப்பேட்டை

17. சிவலிங்க விலாஸ்
புக் டிப்போ
ஈரோடு

18. பாலசுப்பிரமணியம்
செட்டியார் அண்டு சன்ஸ்
புக் செல்லர் & ஸ்டேஷனர்ஸ்
பொள்ளாச்சி

19. A. A. குட்டியப்பா
முதலியார்
ஜெனரல் மர்ச்சண்ட்
ராஜா தெரு
அந்தியூர்

20. கருப்பண்ண கவுடர்
புக் செல்லர் அண் ஸ்டேஷனரி
ராஜா தெரு
கோயம்புத்தூர்

நீலகிரி

1. அறிவு நூலகம்
புக் செல்லர்
உதகமண்டலம்

2. M. குமாரசாமி அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
கூனூர்

3. T. M. ஆரோக்கியசாமி
அண் சன்ஸ்
புக் செல்லர்
மார்க்கட்
உதகமண்டலம்

4. T. R. மீரா மொஹிதீன்
புக் செல்லர்
மார்க்கட் கூனூர்

5. S. நாகப்ப செட்டியார்
புக் செல்லர்
மார்க்கட், கூனூர் R. S.

6. I. B. J. நந்தி கவுடர்
& கோ
ஜெனரல் மர்ச்சண்ட்
உதகமண்டலம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபாடுகாட்டப்படுவது ஒரு சாராருக்கு இழைக்கப்படும் அநீதியுமாகும் என்று துணிந்து கூறுவதற்கு இடமுண்டு.

எனவே, அரசாங்கம், தேவையற்ற வேறுபாட்டையும், இளஞ்சிறார்களது—பிஞ்சு உள்ளங்களால் எதிர்நோக்க முடியாத ஈ எஸ். எல். சி. பரீட்சையை ஒழிக்க வேண்டும் என்று ஆசிரிய-நிர்வாகிகள், நிர்வாகிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நாம் மனதார ஆதரிக்கிறோம்; தீர்மானத்தை ஆலோசனை செய்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

அந்த மாநாட்டில் நிறைவேற்றியுள்ள 'சர்க்கார், ஏழை மாணவர்களை இலவசமாகப் படிக்க வைப்பதற்காக உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்குத் தரும் நஷ்டஈட்டுத் தொகையை மாதந்தோறும் தரவேண்டு'மெனக் கோரும் தீர்மானமும் அரசாங்கத்தால் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வு பற்றி அந்த மாநாடு மேற்கொண்டுள்ள முடிவையும் அரசாங்கம் ஊன்றிக் கவனிக்குமாக!

பிள்ளையார் சுழி

[இரா. நெடுஞ்செழியன்]

ஒரு காலத்தில் இன்றியமையாத பழக்கமாக இருக்கும் ஒன்று, பிற்காலத்தில், தேவையற்ற நிலையில், காரணகாரிய விளக்கமின்றிக் கையாளப்படும் போது, அந்தப் பழக்கம் மூடப் பழக்கம் என்று பெயர் பெறுகிறது. அப்படிப்பட்ட மூடப் பழக்கங்களிலே ஒன்றுதான், இந்தக் காலத்தில் எது ஒன்று எழுதுவதற்கு முன்னும் 'பிள்ளையார் சுழி' இடுவதாகும்.

* * *

ஏன் பிள்ளையார் சுழி போட வேண்டும் என்று கேட்டால், எழுதப்படுபவை 'விக்நம்' ஆகாமல் இருக்கவேண்டுமானல், 'விநாயகரை' நினைத்துக்கொள்ள வேண்டும் என்றும், 'விநாயகர் சுழி'யின் மூலம் 'விநாயகரை' நினைத்துக் கொண்டால் எந்த பிழையும் ஏற்படாது என்று பொதுவாக வைதீகர்கள் சொல்லுகிறார்கள். பிள்ளையார் சுழி ஏன் 'உ' என்று போட வேண்டும் என்று கேட்டாலும், பிள்ளையாருக்கும்'உ'க்கும் என்ன தொடர்பு என்று கேட்டால் பெரும்பாலான வைதீகர்களுக் காரணந் தெரிவதில்லை; "ஏதோ பழைமைக் காலந்தொட்டுப் பெரியோர்கள் அந்தப் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே நாங்களும் அந்தப் பழக்கத்தைக் கொண்டிருக்கிறோம்" என்று கூறிவிடுவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். சமாதானம் கேட்பவர்களுக்கு ஏதேனும் ஒரு சமாதானம் சொல்லித்தீர வேண்டுமே என்பதற்காக மிகக் கவலை எடுத்துக்கொண்டு, ஆதாரம் காட்டுவதற்கு ஏதும் இல்லாததால், தங்கள் சொந்த அறிவுத் திறனைப் பயன்படுத்திப், பிள்ளையாரின் துதிக்கையில் வடிவந் தான் 'உ' என்று போடப்படுகிறது என்றும் கூறிச், சில வைதீகர்கள் தங்களையும், தங்கள் பிள்ளையார் சுழிக் கொள்கையையும் காப்பாற்றிக்கொள்ள முயலுகிறார்கள்.

'உ' என்று குறியிடும் பழக்கம் தமிழகத்தைத்தவிர இந்தியத் துணைக்கண்டத்தின் வேறு எந்தப் பகுதியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. பழந் தமிழ் நாகரிகத்தோடு வளர்ந்துவந்த நாகரிகப் பிடிப்பு மாறுபடாமல் இருந்துவரும் தெலுங்கு—கன்னட—மலையாளப் பகுதிகளின் சிற்சில இடங்களில் வேண்டுமானல் 'உ' போடும் பழக்கம் இருக்கக்கூடும். ஆனல் வடநாட்டிலும், வடமொழி நாகரிகம் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளிலும் 'ஓம்' என்னும் ஒலிக்குறிப்பைச் சுட்டிக்காட்டும் எழுத்தினையே முதலில் எழுதும் எழுத்தாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லோரும் 'ஓம்' என்ற பிரணவத்திற்கும் பிள்ளையாருக்கும் தொடர்பு படுத்தி

வைத்திருக்கிறார்களா என்பதும் ஐயப்பாடாகவே இருக்கிறது. அந்த 'ஓம்' என்பதன் திரிபு தான் 'உ' என்று சிலர் கூற முன் வருவார்களேயானால், அத்தகை யோரின் கூற்று அறிவு ஆராய்ச் சிக்குப் பொருந்தி வருவதாக இல்லை.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'உ'க்கும் பிள்ளையாருக் கும் எப்படித் தொடர்பு ஏற்பட் டது என்பதை வரலாற்று முறை யில் ஆராயும் போது, விடை வியப்பு தருவதாகவே அமைந் திருக்கிறது. விநாயகரைத் தமி ழக மக்கள் கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முன்னால் அறிய மாட்டார்கள். கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முன்னால் விநாய கருக்குத் தமிழகத்தில் கோயில் எதுவும் இருந்ததில்லை, விநாய கரைப் பற்றிய குறிப்பும் தமிழக நூல்கள் எதிலும் காணப்பட்ட தில்லை. இந்த உண்மையை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பவரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான தோழர் சதாசிவ பண்டாரத்தார் அவர் கள் தமது ஆராய்ச்சிக் குறிப் பொன்றில் வெளியிட்டுள்ளார். தோழர் தெ. பொ. மீனாட்சிசுந் தரனார் அவர்களும் 'பிறந்தது எப்படியோ?' என்ற தலைப்புக் கொண்ட நூலில், பிள்ளையார் பிறப்பைப்பற்றி எழுதும்போது, பிள்ளையார் கி. பி. ஏழாவது நூற்றாண்டில்தான் தமிழகம் வந்து சேர்ந்தார் என்ற உண்மை யைப் புலப்படுத்தியுள்ளார். காஞ்சீபுரத்தை நரசிம்மப் பல்ல வன் ஆண்டபொழுது, அவனுக் குப் படைத்தலைவனாக இருந்த பரஞ்சோதி, வடநாட்டில் வாதாபி யைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த இரண்டாவது புலிக் கேசிமன்னனை எதிர்த்துப் படை யெடுத்துச் சென்று, போரில் புலிகேசியைத் தோற்கடித்த தோடு, வாதாத நகரையும் அழித்து, அங்கிருந்து வெற்றிச் சின்னங்களாகப் பல்வேறு பொருள்களைக் கவர்ந்துவந்தான். அப்படிக் கொண்டுவந்த பொருள்களில், விநாயகர் சிலை யும் ஒன்றாகும். பரஞ்சோதி அந்த விநாயகர் சிலையைத் தன் னுடைய சொந்த ஊராகிய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கட்டாங்குடியில் முதன் முதல் நிலைநாட்டினான். அதைப் பார்த்துச் செதுக்கப் பட்ட சிலைகள் தாம், அடுத் தடுத்து ஆங்காங்கு நிலைநாட்டப் பட்டவையாகும். எனவே கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு முன் னால் தமிழகம் பிள்ளையாரையே அறியாது என்றால், 'பிள்ளையார் சுழி'யை எங்கிருந்து அறிந்திருக் கப்போகிறது வரலாற்றின் உண் மைச் சான்றுகளைக் கொண்டு ஆராயும்போது 'பிள்ளையார்' தான் இறக்குமதி செய்யப்பட்ட தாகத் தெரியவருகிறதேயல்லா மல், 'சுழி' இறக்குமதி செய்யப் பட்டதற்கான சான்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan- V. Subramaniam)

ஆறும் வகுப்பு	0	12	0	23	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	14	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 0-14-0 அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

ஆறும் வகுப்பு	1	2	0	15	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	4	0	15	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	4	0	16	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2-0-0 அனுப்பவும்.

சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

ஆறும் வகுப்பு	1	4	0	38	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 2-4-0 அனுப்பவும்.

அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறும் வகுப்பு	0	12	0	41	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
எட்டாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54

மாதிரிப் பிரதிகளுக்கு 1-2-0 அனுப்பவும்.

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	25	19–5–'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	19–5–'54
மூன்றாம் வகுப்பு	0	8	0	25	19–5–'54
நான்காம் வகுப்பு	0	9	0	25	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	10	0	25	19–5–'54

மாதிரிப் பிரதிக்கு 1–2–0 அனுப்பவும்.

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள்					
நான்காம் வகுப்பு	0	5	0	28	19–5–'54
பாலர் கதா போதினி					
ஐந்தாம் வகுப்பு	0	5	0	29	19–5–'54

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–5–0 அனுப்பவும்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc., L.T..)

மூன்றாம் வகுப்பு	0	5	0	...	...
நான்காம் வகுப்பு	0	7	0	18	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	18	19–5–'54

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	8	19–5–'54

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–10–0 அனுப்பவும்.

Regd No. M. 5018.

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., L.T.,

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0	8	0	14	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	14	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	12	0	14	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–15–0 அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	10	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–11–0 அனுப்பவும்.

தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A., L.T.

4, 5–வது வகுப்புகளுக்கு (ஜூன் 1955 கெஜட்டில் பார்க்கவும்.) 0 5 0

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 0–2–0 அனுப்பவும்.

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.,

இரண்டாம் வகுப்பு	0	5	0	13	19–5–54

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

மூன்றாம் வகுப்பு	0	7	0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	12	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	12	0	12	19–5–'54

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் 1–1–0 அனுப்பவும்.

Mother India English Reader Primer - I 0—5—0

மாதிரிப் பிரதிகளுக்கு 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1,